ஓம்.

சிவமயம்.

தண்டாயுதபாணி துணை.

# பழநியம்பதி, உயர்மாதவ

# சாதுமாமுனிவர் வரலாற்றுச்

## சுருக்கம்.

4803
வ: 33ல

இஃது

திருவண்ணாமலை, ஈசானியமடம்

**தவத்திரு சி. சுப்பைய சுவாமிகள் எழுதிவைத்திருந்த**

விரிவான குறிப்பினைக்கொண்டு,

*தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க அமைப்பாளர்,*

**தவத்திரு சுவாமி அருணகிரிநாதரவர்களால் தொகுத்து**

சுருக்கமாக எழுதப்பெற்று,

*ஸ்ரீ நந்தியடிகள் ஆச்சிரமம் சாது மாமுனிவர் சமாதி நிலையம்*

*முதலானவைகளின் பரிபாலகர்,*

**தவத்திரு நாகப்பூர் சுவாமிகள் மேற்பார்வையில்,**

கோவிலூர்
KOVILOOR

ஈரோடு, [illegible],

**V. V. C. R. முருகேசமுதலியார் அவர்கள்,**

பொருட்செலவில் த[illegible]றது.

27-10-51.

உ

தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத் தலைவர்,

திருத்துறைப்பூண்டித் தாலூகா, சங்கேந்தி,

# அருட்டிரு கு. க. சதாசிவ அடிகள் அளித்த

## சிறப்புப் பாயிரம்.

அருட்டிரு சாதுமா முனிவர் வரலாற்றுச் சுருக்கம் என்னும் இந்நூலைப் படித்துப் பார்த்தேன். ஐவகை நிலங்களுக்குள்ளே காட்சிக்கினிய குறிஞ்சிநிலத்தைத் தமக்குரியதாகக்கொண்டு குன்றின் மீதமர்ந்துள்ள குகப்பெருமான் திருப்பணியே தவப்பணியாகக்கொண்டு பற்பல அறச் செயல்களைத் தன்னலங்கருதாது, பிறர் நலங்கருதிச் செய்த அருட்பெருஞ் செல்வன் பழநிச் சாதுமா முனிவர் என்பதை இவ்வரலாறு அழகாக எடுத்துக் காட்டுகிறது. நந்தமிழ் நாட்டிற்குத் தற்காலம் இம்மாதிரியான வரலாற்று நூல் அவசியம். அம்முனிவரின் அருஞ்செயல்களை இவ்வரலாற்று நூலிற் படித்துணரலாம். (இதனை இதனாலிவன் முடிக்கு மென்றாய்ந்ததனை அவன்கண் விடல்) என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க இவ்வரலாற்று நூலை வரைந்து தரும்படி தமிழ்ச் செம்மலும், சங்கம் நிறீஇய தங்கனுமாகிய, சென்னை அருண்மிகு. அருணகிரிநாத அடிகள்பால் விடலாயிற்று. அவர்களும் அன்புடன் எழுதி உதவினார்கள். குன்றின்மீதமர்ந்த குமரன் திருவருள்பெற விரும்பும் மெய்யன்பர்கள் பலரும் இந்நூலைப் பெரிதும் பாராட்டுவர்களென்று நம்புகின்றேன்.

உண்மை அன்புள்ள,

கு. க. சதாசிவம்.

# அணிந்துரை.

ஞானசம்பந்தப் பெருமான் திருமணத்திற் சோதியுடன் கலந்த, ஆச்சாள்புரமென வழங்கும், திருப்பெருமணநல்லூரிற் றோன்றி மக்கள் உய்வான்வேண்டி, திருப்பழநி மலையடிவாரத்தில் வந்தமர்ந்து, பல அற்புதச்செயல்கள்புரிந்து அருட்பெருஞ் சோதியிற் கலந்த, நம் சாதுமா முனிவரரை அறியாதவர் பெரும்பான்மையும் இன்றெனவே கூறலாம். தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின்படி, பற்பல அற்புதத் திருப்பணிகளை அப்பழநியம் பதியில் இன்றும் கண்டு களிக்கலாம். சேர, சோழ பாண்டிய நாட்டுச் செல்வர்கள் பலரைக்கொண்டு, அருட்டிரு நாகப்பூர் சுவாமிகள் வாயிலாய் செய்துள்ள திருப்பணிகள் பலப்பலவாகும். தமிழுக்கும், சைவத்துக்கும் ஒரு சிறந்த தொண்டு தற்காலத்திலே சுவாமிகள் செய்தருளியுள்ளார்கள் என்பதை இச் சாதுமா முனிவர் வரலாற்றுச் சுருக்கத்தில் மிக விரிவாய்க் காணலாம். சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும் குறைந்து வரும் நிலைகண்டு நந்தமிழ் முருகன் சுவாமிகளைக் கொண்டு செய்துவித்தானென்றே கூறலாம். இந் நூலுள் நுழைந்தால், அவற்றை நன்றாக அறிந்துகொள்ள இயலும். சுவாமிகளொடு பன்னெடு நாள் நெருங்கிப் பழகிக்கண்டு, மகிழ்ந்த யான், இவ்வரலாற்று நூல் மக்கள் உள்ளத்தில், அறச்செயல் புரியும் மிகப் பேரருளை நல்குமென்றே பெரிதும் நம்புகிறேன்.

இந்நூலை, அன்பர்கள் அனைவரும் படித்துணருமாறு வரைந்துதவிய நல்லன்பர் உயர்வீரத் துறவியும், நந்நூல்கள் வரைந்து நம் நாட்டிற்குதவிய நலமிகு சீலரும், தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க ஸ்தாபகருமாகிய, உண்மைத் தமிழன்பர், அருட்டிரு அருணகிரிநாத அடிகளாராவார்கள்.

இவ்வுயரிய நூலை அருட்டிரு சாதுமாமுனிவரரின் முதலாண்டு குருபூஜை விசேடதினத்திலேயே அச்சிட்டு வெளிப்படுத்தப் பேரார்வமுற்று முன்வந்த பெருந்தகையாளர், சைவ சித்தாந்த மகாநாடு, திருப்புகழ் மகாநாடு, திருமுறை மகாநாடு முதலிய மகாநாடுகளை இப்பழநியம்பதியிலேயே நடாத்தியும் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு தங்க ரதம், தங்க மயில் வாகனம் முதலியவைகளைச் செய்தளித்தவருமாகிய, ஈரோடு உயர்திருவாளர் V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள் இவ்விருவரும் காலத்தினாற் செய்த நன்றி, என்றும் மறக்கற்பாலதன்று. இவ் வரலாற்றுச் சுருக்க நூலைத் தமிழ் மக்களனைவரும், படித்து இன்புறுமாறு முருகப்பெருமான் திருவருளை மன மொழி மெய்யொன்றி வணங்குகின்றேன்.

அன்பு ஓங்குக! இன்பம் வளர்க!!

சிதம்பரம், மௌனானந்த பாதசேகரன்,

**சாது சிங்காரவேல் அடிகள்.**

# அன்புரை.

எனது குருநாதன், அருட்பெருஞ் செல்வன் 'சாதுமாமுனிவர் அவர்கள்' வரலாற்று சுருக்கம் பார்க்க என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது. இந்நூலைப் பார்க்கும் போதெல்லாம் குருநாதன் காட்சியாகவே எண்ணுவேன். அம்மகானுடைய அருஞ் செயல்களை, இந்நூல் அழகாகவும், தெளிவாகவும், எடுத்துக் காட்டுகிறது. இந்நூலை மக்கள் அனைவரும் படித்துப் பயனடையுமாறு எல்லாம் வல்ல அன்னை பராசக்தியைத் துதிக்கின்றேன்.

பழநி நந்தியடிகள் ஆச்சிரமம்,

திருமூர்த்தி சுவாமிகள்.


உ

# முகவுரை.

அமிழ்தினுமினிய நந் தமிழகம் சென்ற காலத்தின் பழுதிலாத்திறனைப் பெறுவான்வேண்டியே, இறைதிருவருளால் வந்து தோன்றியவர் நம் பழநிச்சாது மாமுனிவர் அவர்கள் என்பால் மிக்க அன்புபூண்டு, தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க நிரந்தரத் தலைவராக இருப்பதற்கு மனமுவந்து ஒப்புக்கொண்டார்கள். அப்பெருந்தகைப் பேரருளாளர், ஈசனடியார்கட்கும், வறிஞர்கட்கும் உணவளித்துப் போற்றிய பண்பு, உலகம் நன்கறிந்ததேயாகும். அம் முனிவரின் வரலாற்றைத், திருவருணை ஈசான்ய மடம் அருட்டிரு, சி, **சுப்பையா சுவாமிகள்** விரிவாகத் தொகுத்து வைத்திருந்ததை அருட்டிரு **சாது சிங்காரவேல் அடிகள்**, என்னிடம் கொடுத்துச் சுருக்கமாக விரைவில் எழுதித் தரும்படி கூறினார்கள். அவ்வமையம், யான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். உடனே ஆர்வமிகுதியால், நம்நோய்க்கு இஃதோர் சிறந்த மருந்தென வெண்ணி, இவ்வரலாற்று நூலை எழுதியளித்தேன். இந்நூலில் சிலவற்றை, நோயின் மிகுதிப்பாட்டால் மறதியாய் விடப்பட்டிருப்பினும் அன்பர்கள் பொருத்தருளுமாறு வேண்டுகின்றேன். நந்துறவிவேந்தன் சாதுமாமுனிவர் வரலாற்றைப் படித்துணர்ந்து நன்னெறியிலொழுகுமாறு எல்லாம் வல்ல இறை திருவருளைப் போற்றுகின்றேன்.

சென்னை, நாராயண தேசிகர் ஆச்சிரமம்,

**அருணகிரிநாத அடிகள்.**



பழநியம்பதி

ஸ்ரீலஸ்ரீ சாது சுவாமிகள்.

[illegible]

上

[illegible]

[illegible]

ஓம்

சிவமயம்.

தண்டபாணி துணை.

# பழநியம்பதி உயர்தவ சாதுமாமுனிவர், வரலாற்றுச் சுருக்கம்.

## நூல்

### காப்புச் செய்யுள்.

மாதவச் சாது வரலா றுலகறிய
ஓத வுரைநடையில் ஒண்டமிழால்—ஏதமற
உண்ணின் றருளும் ஒளியாம் வேழமுகன்
வண்ணத் திருத்தாண் மலர்.

### சாதுமாமுனிவர் வணக்கம்.

உலகெலா முய்ய ஐந்தொழில் விரிய
உமையொரு பாலிருந் தருள்
அலகிலா நடஞ்செய் அம்பல வாணன்
அருளினால் உலகினிற் றோன்றி
நலமலி நந்தியடிகளா ரருளான்
நற்றவ ஞானியாய் அன்பர்
மலமொரு மூன்றும் ஒழித்தருள் சாது
மாமுனி வரனடி பணிவாம்.

### திருப்பெருமணநல்லூர், அறப்பெருஞ் செல்வர்:

உலகெலாம் உய்ய ஆக்கல் முதலிய ஐந்தொழில்களும், தமது திருவுருவிலமைய இன்ப நடம்புரியும் அம்பலவாணரின் செம்பொற் கோவில் திகழும் திருத்தில்லையம்பதிக்குத் தென்பால் தீம்புனல் நிறைந்த கொள்ளிடத்தாற்றுக் கருகில் வள்ளல் திருஞானசம்பந்தப் பெருமான் அடியார்களும், அன்பர்களும் சூழத்திருமணக்கோலத்தோடு

சிவப் பேரொளியில், இரண்டறக் கலக்கப்பெற்ற, நல்லூர்ப் பெருமணம் என்னும், ஆச்சாள்புரத்தின்கண் விளங்கும், தொண்டமண்டல சைவ வேளாளர் மரபினர்குல, வரழையடிவர்ழையாய் வந்த திருக்கூட்டமாகிய சிவனடியாரிடத்தும், சிவபெருமானிடத்தும் இடையறு அன்புடன் தொண்டுபூண்டொழுகி நல்லறமாகிய இல்லறத்திருந்து விருந்தோம்பி வேளாண்மை செய்துவரும் பெருநிலக்கிழாராகிய முத்துக் கிருட்டிண முதலியாரென்னும் தமிழ்ப் பெருமகன் ஒருவர் இருந்தார். அவர் தம் பெருநிலப் பண்ணைகளில் இன்னும் புளியந்துறை முதலிய பலவூர்களிருக்கின்றன. அவர் தம் சிவத்தொண்டுக்கு எடுத்துக்காட்டாக, திருமணநல்லூர்ப் பெருமான் திருக்கோவிலின் கிழக்குவாயிற் பெரியகோபுரம் அவரால் கட்டப்பட்டதாகும். அஃதன்றி நித்திய நைமித்திக பூசனை திருவிழா முதலிய நடைபெறுதற்குறிய படித்தரக் கட்டளைகளையும் ஏற்படுத்தியுள்ளார். அத்தகைய் சிவபுண்ணியத்தால் அவ்வறப்பெருஞ் செல்வருக்கு, அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி எனும் ஆடவற்குரியபண்புகள் நான்கும் ஒருங்கே அமையப்பெற்ற பொன்னுச்சாமிமுதலியாரேன்னும் பெயரிய ஓர் புதல்வர் தோன்றினர். அவர் இளமையிலேயே "கற்கக்கசடறக் கற்றபின் நிற்க அதற்குத்தக" எனும் மறைமொழிக் கிலக்காகக் கற்றுணர்ந்தொழுகி, தமது தந்தையைப்போல் இல்லறம் ஏற்று, நல்லறம் புரிய எண்ணி, கற்பிற்சிறந்த பெண்ணின் நல்லாளாகிய காவேரியம்மையைக் கடிமணம்புரிந்து கருத்தொருமித்த காதலுடையராய் தமது குலம் விளக்கும் நலம்பல செய்து இன்ப வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

### திருவாளர் பொன்னுச்சாமி முதலியாரவர்களும், காரைக்குடி அறுபத்து மூவர் குருபூசை மடம் சைவசித்தாந்தச்செல்வர் சோக்கலிங்க ஐயா அவர்களும் சந்தித்தல்.

அவர் தம் சமயப்பற்றும், அறப்பெருந் தொண்டுகளையும் கேட்டறிந்த காரைக்குடி அறுபத்துமூவர் மடத்துச் சைவப் பெரியார் திரு. சோக்கலிங்க ஐயா, அவர்கள், ஆச்சாள்புரத்தில் சிவதரிசனம் செய்தபோது, அவர்களுக்கும், பொன்னுச்சாமி முதலியார் அவர்களுக்கும், அறிமுகம்

ஏற்பட்டு நட்பு உண்டாகியது. அதுமுதல் அப்பெரியார், பொன்னுச்சாமி முதலியார் இல்லத்திலிருந்து கொண்டும், சிவதரிசனம் செய்துகொண்டும், அன்பர்களுக்கு சைவ சமய நூல்களைப் பாடஞ்சொல்லிக்கொண்டும் இருந்தார்கள்.

## புத்திரப்பேறு குறித்துத் தவம் செய்தல்.

இவ்வாறிருந்து வரும் போது, பொன்னுச்சாமி முதலியாருக்கு மகப்பேறு கிட்டாததால், வருந்தி நன்மகப் பேறு குறித்து, தனது வாழ்க்கைத் துணைவியோடு தில்லையம்பதிக்குச் சென்று அங்கு தன் மைத்துனர் பழநிமுதலியாரவர்கள் இல்லத்திலிருந்து கொண்டு, நாடோறும் காலையில் நன்னீராடி, பட்டாடையுடுத்தி, சிவபூசை முடித்து, புறந்தூய்மையோடு, அகந்தூய்மையும் ஒருங்கே அமையப்பெற்றவராய், காலை மாலை இருவேளையும் பொன்னம்பலத்திற்குச் சென்று முறையாக அம்பலவாணனை வழிபட்டு வந்தார்கள்.

## தில்லைச் சபாபதி அருளால், சபாபதி பிறத்தல்.

அவர்கள் வழிபாட்டுக்கு இறைவன் திருவுளமிரங்கி சிவநெறியும் சிவனடியார்களும் சிறந்தொளிரும்படி செய்ய வல்ல ஒரு சேயும், உங்கள் குடி விளங்குதற்குரிய செயல்களும் தோன்றுமாறு திருவருள் புரிந்தான். இறைவன் திருவருட்குறிகுறியாக அன்பர் பொன்னுச்சாமி முதலியார் மனமகிழ, அவர் தம் நல்லற மனைவி காவேரி அம்மையின் கருவில் உருக்கொண்டு கி. பி. **1890** விக்ருதி ஆண்டு பங்குனி மாதம் **17**-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை, நற்கோள்கள் உச்சம் பெற்றிருக்கும்போது இசைஞானியார் வயிற்றிலிருந்து நமது திருநாவுக்கரசு தோன்றினாற்போல், நமது சாதுமாமுனிவர் உலகிற்றோன்றினார். சிற்சபேசன் அருளால் தோன்றினமையால், தாய் தந்தையர் தம் அருமைத் திருக்குழந்தைக்கு சபாபதியெனப் பிள்ளைத் திருப்பெயர் சூட்டிப்பாராட்டிச் சீராட்டி பரிவொடு வளர்த்துவந்தார்கள். நமது சபாபதிக்கு அம்புலிப்பருவம் முதல் சிறு தேருருட்டித் தெருவில் விளையாடும் பருவமுங்கடந்து பள்ளியிற் பயிலும் பருவமாகிய ஆறுவது பருவந்தொடங்கிற்று. தம்மையொத்த சிறுவர்களோடு

சேர்ந்து தெருவில் ஆடிப்பாடித் திரிவதை விட்டு, பெரியார் இணக்கத்துட்பட்டு பெருமணநல்லூர்ப் பெருமானை வழிபட்டு, பெற்றவர் சொற்குக் கட்டுப்பட்டு நடக்கும் பெற்றிமையுடையராய் இளமையிலேயே யார் எதைக் கேட்பினும் இல்லை எனச் சொல்லாமல், அன்போடு எடுத்துக் கொடுத்து மகிழும் இனிய பண்புடைமையும் பிறவியிலே அமைந்திருப்பதைக் கண்ட அடியார், பெரியார், ஆதுலரனைவரும் பெருவியப்படைந்து, விளையும் பயிர் முளையிலே தெரியுமென்றார்களே பெரியோர்கள் அது சரியாய் இருக்கின்றதே; இவன் முகத்தையும், குணத்தையும், செயலையும் பார்க்கும் போது, பின்னால் இவனொரு மாதவனாகி அரும் பெருஞ் செயல்களைச் செய்து பெரும்புகழுடையவன் என தாய் தந்தையரிடம் கூறி நம் சபாபதியை வாயார வாழ்த்தி நெற்றியிலே திருநீற்றுக் காப்பிட்டுச் செல்வார்கள்.

## வித்தியாரம்பம்.

முளையிலிருந்தே நன் மணமுங் குணமுங் கமழும் மரிக்கொழுந்தினைப்போல் பிறப்பிலேயே நல்லியல்பு மணங் கமழப்பெற்ற நம் சபாபதிக்கு கல்வி மணமுங் கமழச் செய்வான் வேண்டி, தம் தந்தையார், சீர்காழியிலுள்ள முதலியார் உயர்நிலைப் பள்ளியிற் கொண்டுபோய்ச் சேர்த்து, தமிழும், ஆங்கிலமும் பயிலவைத்தார்கள். நம் சபாபதிக்கு பன்னிரண்டகவை முடியும் வரையில்தான் அப்பள்ளியிலேயே பயின்றுவந்தார்கள். பின்பு ஆங்கிலப்படிப்பில் வெறுப்புத் தோன்ற, ஆங்கிலேயரிடம் அடிமைத் தொழில் (உத்யோகம்) செய்ய விரும்புவோன் இதைப் படிக்க வேண்டும், "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்றார் பரம்பரையில் வந்த யான் இதை என் படிக்கவேண்டும். இதுவரை படித்தது போதும் இனிமேல் இந்த ஆங்கிலப்படிப்பை படிக்கமாட்டேன், தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் அறிந்தடைவதற்குரிய அமிழ்தினும் இனிய தமிழ்க் கலையையும், சமஸ்கிருதக் கலையையுந்தான் கற்பேன் என உறுதிகொண்டுவிட்டார், நம் சபாபதி உடனே ஆசிரியரிடத்துக்குச் சென்று தம் கருத்தைத் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டு தமதில்

லத்திற்கு வந்து சேர்ந்தார். தந்தையாரிடத்தில் சமயம் பார்த்து தமது கருத்தைத் தெரிவித்தார். தந்தையார் இதனைக் கேட்டதும், மிகச்சினமடைந்து, அடே! உனக்கு அவ்வளவு துணிவு வந்துவிட்டதா? ஆங்கிலப்படிப்பு எனக்கு வேண்டாமென்று என்னிடம் வந்து சொல்வதற்கு. பி. ஏ. எம். ஏ., பி. ஏ. பி. எல்., முதலிய பட்டங்களைப் பெற்று, உயர்ந்த பதவிகளை ஏற்று பல நாடுகளுக்குச் சென்று, பாராட்டுத்தாள்களைப் பெற்று, பணந்தேடிக் குவிக்கப் பெற்று, வாழவிருப்புற்று பணம் செலவழித்துப் பலபேர் படிக்கும் ஆங்கிலப் படிப்பை விட்டுப் பரதேசிப் படிப்பைப் படிக்கவா விருப்புற்றாய்? மிகவும் நன்றாயிருக்கிறது நீ, ஆங்கிலம் படித்தால்தான் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமுந் தருவேன், இல்லையேல் ஒன்றும் இங்கு கிடைக்காது என்பதை உணர்ந்து நடந்துகொள், என்றார். அப்படியா? கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுள் தேரைக்கும் விருப்புற்றமுதளிக்கும், மெய்யனான அம்பலவாணனே எல்லா உயிர்கட்கும் உண்மைத் தந்தையாவன் அவனிருக்கும் போது எனக்கென்ன கவலை. அவன் திருவடியை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுவேனாகில், என்னை ஊட்டி வளர்க்கானோ? பார்க்கின்றேன், பார்க்கின்றேன் என தந்தை தாய் இருவரும் பின்னால் உணரும்படி அறிவுறுத்திவிட்டுச் சென்றார்.

## தில்லைக்கேகல்.

### தமிழும், சமஸ்கிருதமும் கற்றல்.

தமது ஊரைவிட்டகன்று தில்லையம்பதிக்குப் போய் அம்பலவாணரை வணங்கிவிட்டு, அங்கு தேவாரப்பாடசாலை வைத்து நடத்துவதோடு, தமிழ் சமஸ்கிருத பாடங்களையும் நடத்திக்கொண்டு வருகின்ற தனது அம்மான் பழநியப்ப முதலியார் வீட்டுக்குச் சென்று அவரைக்கண்டு தமது கருத்தையிண்டார். அதற்கவர் மிகவும் மகிழ்வு கொண்டு, அப்பா குழந்தாய்! இந்தப் பாடசாலையும், இதற்குறிய சொத்துக்கள் யாவும் நின்னுடையதேயாம். எங்கள் மரபில் நீ ஒருவன், தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளையும்,

நன்றாய்ப் படித்துப் பெரும்புலமை எய்துவாயாகில் அதுவே யாங்கள் பெற்ற பெருஞ்செல்வமாகும். என்று அன்பும், ஆர்வமும் ததும்ப நம் சபாபதியைக்கட்டியணைத்துக்கொண்டு கூறி தம்மில்லத்தில் வைத்து, தம் மகவினும் பன்மடங்கு ஆதரித்து ஊட்டி வளர்த்து, தமது பாடசாலையில் தக்க ஆசிரியரை வைத்துத் தமிழும் சமஸ்கிருதமும் பயிலச் செய்தார்கள். அவ்வாறு பயின்றுவரும்போது, நம் சபாபதியார் நடராஜப் பெருமானைத் தரிசிப்பதற்காக நாள் தோறும் திருபொன்னம்பலத்திற்குச் சென்று வருவார்கள்.

## துறவறப் பெரியாரைக் கண்டு வழிபடல்.

அவ்வாறு போகும்போதெல்லாம், ஆங்கு, ஓரே கோவணத்துடன்வந்து அம்பலவாணனை வணங்கிச்செல்லும் மாதவராகிய தில்லை மௌனசுவாமிகளை குறிப்பாகக் கண்டு வணங்கி வருவார்கள். ஒருநாள் அவர்களைப்பற்றி அவர்களிருக்கும் ஆச்ரமத்திற்குப் போய், அவர்களை வணங்கித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பலநாள் தொண்டு செய்து வந்தார்கள்.

## உபதேசம்.

இவர் தம் அன்பு கலந்த தொண்டின் குறிக்கோளை மாதவராகிய மௌன சுவாமிகள் உணர்ந்து முழுவெண்மதி ஒளிரும் ஓர் நல்ல நாளில் நம் சபாபதியை தனியாக அருகழைத்து முறைப்படி "சூக்குமத்" திருவைந்தெழுத்தினை உபதேசித்தருளினர். அதிலிருந்து அம்மந்திரத்தை அன்போடும், அமைதியோடும், சிரத்தையோடும் ஜெபித்து வரலாயினர். அதனால் பின்னர் தான் எண்ணிய எண்ணியாங்கு எல்லா நலன்களையும் எய்தினர்கள். இவ்வாறு பாடசாலைப் படிப்பிலும், பரமன் அடியார் வழிபாட்டிலும், பஞ்சாக்கர ஜெபத்திலுமாக மூன்று ஆண்டுகளை கழித்தனர் நம் சபாபதி.

## ஆச்சாள்புரம் சேரல்.

### கணபதி பூசை, அரன் பூசை, அடியவர் நேசம், ஞான நூல் ஓதுதல்.

ஒரு நாள், முன்செய்த நல்வினைப் பயனால், இனி மேல் நமக்கு அடியாருறவும், பெரியார் சேவையும், அரன் பூசை நேசமும், ஆலய வழிபாடுமே செய்யத் தகுவன, அவையே நமக்கு உறுதுணையாய் நின்று, இறுதியில் பேரின்பப் பெருவாழ்வாகிய பேற்றினைத் தருவனவாம் எண்ணி முடிவு செய்தார்கள். இவ்வெண்ணத்தை தமது அருமைத் தாய்மாமாவாகிய பழநியப்ப முதலியாரிடம் ஒரு நாள் எடுத்துக்கூறி விடைபெற்றுக்கொண்டு தமது ஊருக்கு வந்து தமதில்லத்திலிருந்துகொண்டு, நாடோறும் விடியற் காலையில் எழுந்து, தாய் தந்தையரை வணங்கிச் சென்று காலைக்கடன் முடித்து, நன்னீராடி, நறுமலர் எடுத்துத் தொடுத்து, அன்போடு பிள்ளையார் பூசை செய்தல். பட்டினத்தடிகள், தாயுமானர், அப்பர் சுவாமிகள் முதலான முற்றத்துறந்த முனிவர்களின் திருவுருவப் படங்களை ஓர் தனி அறையில் வைத்துப் பூசை செய்தல். அவர்கள் திருவாய் மலர்ந்த நூல்களையும், அவர்கள் வரலாறுகளையும், படித்தல். தனியிடத்திலமர்ந்து இயமநியமாதி யோக பயிற்சிகளைச் செய்தல், தமது இல்லத்திற்கு வரும் பெரியார், அடியார்களொடு நட்புக்கொண்டு குறிப்பறிந்து அவர்கட்கு வேண்டுவன செய்தல், அன்னார்பால் பக்தி வைராக்கிய ஞான நூல்களைக் கற்றல் முதலிய ஞானவேட்கையுடையார் கட்குறிய நன்னடக்கையில் ஈடுபட்டுக்கொண்டு வந்தார்கள்.

### 2. சைவ நூல் கற்றல்.

அன்றியும், அவர்கள் இல்லத்திலிருந்துவரும், சைவப்பெரியார் சொக்கலிங்க ஐயா அவர்களிடம், நால்வர் நான்மணி மாலை முதல் கந்தபுராணம் வரையுள்ள பல இலக்கிய பாடங்களையும், சைவ சித்தாந்த நூல்களில் முதன்மையாகிய சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய

நூல்களையும், பாடங்கேட்டு வந்தார்கள். இது நிற்க தன் மகன் அடியாருடன் மிக நெருங்கிய தொடர்புடையவனாக இருத்தலைக் கண்டு இவன் நிலைமையைப் பார்த்தால், துறவியாகி விடுவான் போல் தெரிகிறதே என்றெண்ணி அடியார்களைக் கண்டால், சுவாமிகளே இந்தப் பையன் மிகவும் கெட்டவன், உங்களிடம் மிக நல்லவன் போல் நடிப்பான், பின்பு உங்களையே திட்டுவான், இவனை நீங்கள் கிட்டச் சேர்க்காதீர்கள் என்று சொல்லுவார்கள். இதை நம் சபாபதியார் கேட்டுப் புன்சிரிப்படைவார்.

## 3. பல நூற் பொருளையும் அறியவேண்டுமென்ற எண்ணம்.

ஒரு நாள், அவர், அடியார்களிடம் கற்றுவந்த கைவல்ய நூலை ஒருநாள் தனித்துப் படித்துக்கொண்டிருந்தார். அதனை சைவப்பெரியார் சொக்கலிங்க ஐயா, மின்புறமாக வந்து நின்று பார்த்தும், காதினால் கேட்டும் மிகச்சினமடைந்து, ஐயோ, இவன் மிகவும் கெட்டு விட்டானே, மாயாவாதக் கைவல்ய நூலையும் படிக்கின்றானே. இவனுக்குப் பயில சைவ சித்தாந்த நூல்களைப் பாடஞ்சொல்லி வைத்தேனே அவற்றையெல்லாம் ஆற்றில் கரைத்த புளியாக்கி விட்டானே என்று மிக இரைந்து பேசுவதைக் கேட்ட சபாபதியாரின் தாய் தந்தையர் பரபரப்புடன் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்களைப்பார்த்து, ஐயோ, உங்கள் பயல் மிகக் கெட்டுவிட்டான், இனிமேலிவன் உங்களுக்குதவான் என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார். அதுகண்டு அவர்களும் வருந்தினார்கள். இவையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தும் நம் சபாபதி மறுநாள் காலையில் வழக்கப்படி அப்பெரியாரிடம் பாடங்கேட்கப் போனார். அதுகண்டு அப் பெரியார், இனிமேல் உனக்குப் பாடஞ்சொல்ல முடியாதென்றார்கள். மன்றாடி வணங்கிக் கேட்டும் அவர்கள் முடியாதெனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். நம் சபாபதி எதிலும் பற்றற்ற உள்ளமுடையவராகையால், ஐயா, இனிமேல் நீங்கள் எனக்குப் பாடஞ் சொல்லாவிட்டாலும் பரம குருவாகிய இறைவன் திருவடி ஞானமென்னும் அருள் ஞானம் பாடங்கேட்ட அளவு எனக்கு என்றும் உறுதுணையாக இருக்கிறது. தாங்கள் என்னைப்பற்றி கவலைப்பட

வேண்டாம், வணக்கம் போய்வருகின்றேன் என்று சொல்லி சென்று விட்டார்கள்.

## திருமணம்.

இவ்வாறிருக்கும் புதல்வன் நடத்தைகளைப் பார்த்துக்கொண்டிருந்த தாய் தந்தையர், இன்னும் இவனை இவ்வாறு விட்டுக்கொண்டிருக்கக் கூடாது, இவனுக்கு ஓர் நல்ல பெண்ணைப்பார்த்து மணஞ்செய்து விட்டால் எல்லாம் சரிப்பட்டுவிடும் என்றெண்ணி, தமது மரபில் உயர்குடியிற்பிறந்த பெண்ணினல்லாளைத் திருமணஞ் செய்து வைத்தார்கள். ஆயினும், நம் சபாபதியின் மனம், இம் மணவினையால் மயங்கிவிடவில்லை. ஆகவே, அடியாருறவு நீங்கிவிடவில்லை. ஆனால், தாய் தந்தையர் கருத்தறிந்து, அவர்கள் றியா வண்ணம் அடியாருக்குத் தொண்டு செய்து வந்தார்கள். இவ்வாறு செய்துவருவது, தாய் தந்தையருக்கும், தம் மனைவியாருக்கும் விருப்பமில்லாததைை அறிந்து கொண்டார்கள்.

## பண்ணை மேற்பார்வை.

இவ்வாறிருக்கும் போது, ஒருநாள் தமது புளியந்துறைக் கிராமப் பண்ணையைப் போய் பார்த்துவிட்டு வரும்படி தமது தந்தையார் பணித்தார்கள். அதைக் கேட்ட நம் சபாபதியார், இதுவரை நம்மைத் தனித்துச் செல்லும்படி கட்டளையிடாத நம் தந்தையார், இன்று போய்வரும்படி ஏவினது மிக வியப்பாக இருக்கிறது இதுவும் நமது நன்மைக்கேயாம் என்று எண்ணி, மிக மகிழ்ச்சியோடு போய் பண்ணையைப் பார்த்துக்கொண்டு திரும்பி வரலானார்.

## துறவறப்பெரியார் இணையடி சேர்தல்.

வரும் வழியில், மகேந்திரப்பள்ளித் தலத்திற்குச் சென்று இறைவனை வணங்கிக்கொண்டு திருமணல்லூருக்கு இறைவனை வணங்குதற்கு வரும் மிகப்பெரியாராகிய, ஓர் துறவியைக் கண்டார். கண்டவுடனே வழியிலேயே அவர்

திருவடியில் வீழ்ந்து வணங்கி எழுந்து இரு கைகளையும், சிரமேற் குவித்த வண்ணம் தேம்பித் தேம்பி அழுதார்கள். அதனைக்கண்ட அப் பெரியார், இவன் மாதவனுகத்தக்கவன் என்று கருதி மகிழ்ந்து, ஏனப்பா அழுகிருய். கற்வைப்பசு மலையிலே புல்லை மேய்ந்துகொண்டிருக்கும், மாலையில் தன் கன்றை நினைத்து கதறிக்கொண்டு பால் கொடுக்கக் கீழே இறங்கி ஓடிவரும். கன்றும் தாய்ப்பசுவின் கதறலைக்கேட்டு மிக்க ஆவலுடன்கதறிக்கொண்டு எதிரே ஓடி தாயைக்கண்டு பாலைக் குடிக்கும். கன்றுக்குப் பாலைக்கொடுத்துவிட்டு பசுவானது மீண்டும் மலைக்குப்போகும், மீண்டும்வரும். இதற்கேன் கவலைப்படுகிருய், என்று பரிபாடையாகச் சில அருள் மொழிகளைக் கூறிவிட்டுச் சென்றூர்கள். தாமும் அவரை விடாமற் பின்பற்றிச் சென்று, தமது ஆச்சாள்புரத்தில் வீதிவரும்போது தமது தாய் தந்தையர் அறியாவண்ணம் தனது நண்பன் ஒருவன் வீட்டில் அப்பெரியாரை உட்கார வைத்து, நண்பனிடம் உன்வீட்டில் பால்இருக்கிறதாவெனக் கேட்டார். நண்பனும் மகிழ்ச்சியோடு வேண்டிய அளவு இருக்கிறது என்று சொல்லி ஒரு செம்பில் நிறையப் பால் கொண்டுவந்தார். அந்தப்பாலை வாங்கி அப்பெரியாருக்குக் கொடுத்தார். அவர் அதை அருந்தி, மீதியான பாலை நம் சபாபதியை அருந்தும்படி அப்பெரியார் கொடுக்க அதை அன்புடன் வாங்கி உட்கொண்டார்கள். பின்னர், அப் பெரியார் நம் சபாபதியை நோக்கி, ஐய! உன் எண்ணம் ஈடேற எல்லாம் வல்ல இறைவி அருள்புரிவாள். பயப் படாதே என்று வாழ்த்திவிட்டுப் போய்விட்டார்கள்.

அப்பெரியார் யாரெனில் திருவிசைநல்லூரில் பார்ப் பனக்குடியில் பிறந்தவர், யாருமறியாமற் பலநாள் இராஜ ராஜேஸ்வரி பூஜை செய்து சித்தி பெற்றவர். இவருக்கு இளமையிலேயே மணமாகி இருந்தது, மனைவி பூப்படைந்து தனது இல்லத்திற்கேகு முன்னரே, ஜகதீஸ்வரி வந்திருக் கின்றூள் என்று சொல்லிக்கொண்டே இருப்பாராம். அவர் கருத்தை அறியாதார், இவன் ஒரு பெண் பைத்தியம் பிடித் தவன் என்று சொல்வார்களாம். இவர்மனைவி பூப்படைந்து இல்லத்திற்கு அழைத்து வந்து சாந்தி முகூர்த்தஞ் செய்து

பள்ளியறையில் விட்ட அன்றிரவு, தன் மனைவியை பஞ்சணை மேல் அட்டணைக்காலிட்டு உட்கார்வைத்து, இறைவியாகப் பாவித்து அங்கிருந்த பூ சந்தனம் பன்னீர் பழம் பால் முத லியவைகளைக் கொண்டு பூசை செய்து, ஓ ஜெகன் மாதாவே எனக்கு அநுக்ரகஞ் செய்வாயாக என்று வணங்கி நின்றார்களாம். அந்த அம்மையார், தேவியின் ஆவேசத்தோடு, தன் வலக்கையை அவர் தலைமேல் வைத்து, சுத்திநிபாதம் என்னும் அநுக்ரகம் செய்தார்களாம். அவ்வம்மையின் அருள்பெற்ற அவர், உடனே அவ்விரவிலேயே வெளிப் பட்டு சிருங்ககிரி ஜகத்குரு பீடத்துக்குச் சென்று, அவ்வம யம் ஆச்சாரிய பதவியிலிருந்த, உயர்மாதவ நரசிம்ம பாரதி சுவாமிகளிடம் துறவாச்சிரமம் பெற்று சைதன்யபாரதி என்னும் திருப்பெயரையும் பெற்று விளங்கினார்களாம்.

## சபாபதியாரின் பரமகுருநாதர் எழுந்தருளல்.

அத்தகைய பெருமை வாய்ந்த பெரியாரவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்ற நம் சபாபதியாருக்கு முன்னையிலும் உலக வாழ்க்கையில் வெறுப்பு மிகுதியாயிற்று அச்சமயம் திருக்கைலாய நந்தியெம்பெருமான் பாரம்பரையில் வந்த திரு நந்தியடிகள் என்னும் பெரியார், திருமணநல்லூருக்கு யாத்திரையாக வந்தார்கள். அவர்களை அன்பர் பொன்னுச் சாமி முதலியார் அழைத்து வந்து தமதில்லத்தில் இருக்கும் படி செய்து மிக அன்போடு உபசரித்து வந்தார்கள். அப் போது நம் சபாபதியார், தந்தையினுமிக்க அன்புடையராய் அப்பெரியாரின் குறிப்பறிந்தொழுகி அவருள மகிழ வேண் டிய தொண்டு செய்து வந்தார்கள். நந்தியடிகளார். சபாபதி யின் நல்லொழுக்கம், நற்பண்புகள், நன்னடைகளைக் கண்டு வியந்து அருட்கண்ணோக்கஞ் செய்துவிட்டுச் சென்றார்கள்.

## இல்லறம் துறத்தல்.

பின்னர் சபாபதியார், முன்னை நல்வினைப் பயனும் இப்பிறப்பில் இதுகாறுஞ் செய்துவந்த இறை வழிபாட்டி லும், அன்பர் பணியாலும், பெரியார்கள்செய்த ஆசீர்வாதத்

தாலும் அகந்தூய்மையாய் தீவிரஜிக்ஞாசை ஏற்பட்டதால் இனி ஒருநொடிப்பொழுதேனும் தாமதிக்காமல் துறவறம் மேற்கொண்டு பிறவிப்பயனையடைவதற்குரிய பேரின்பத்தி யனைத்தேடிச்சென்று துன்பவடிவாயப் பிறவிவாராமல் ஒழிக்க வல்ல மெய்யுணர்வைப்பெற்றுதவநெறியில் நின்று பேரின்ப நிலையைப்பெற வேண்டுமேயல்லாமல் முள்ளின் மலர்வாய்த் தேனையொத்த இவ்வுலக வாழ்க்கையாலெய்தும் சிற்றின்பத் தைக் கனவிலுங்கருதேன். இனி ஒரு சிறிதும் இதில்மயங்கி யிருக்க மாட்டேன் என உறுதிகொண்டு, ஒரு நாள் நள்ளி ரவில், தன் தாய் தந்தையாரையும், தனது காதலியையும், தனது பேரில்லத்தையும்,செல்வத்தையும்விட்டு சிகித்துவச மன்னன் தனது அன்பான பட்டத்தரசியையும், அரசாட்சி யையும் விட்டுத் துறவு சென்றதே போல் அரையிற்கட்டிய ஒரே ஆடையோடு, ஆண்டு 1914ல் துறந்து சென்று விட்டார்கள்.

பசிவந்தபோது கையார யேற்று அங்ஙனே நின்று அருந்திக்கொண்டு, நாடெங்கும் யாத்திரை செய்துகொண் டும் வந்தார்கள். அந்நிலையில், அரையில் கட்டிய ஓராடை யும் மிகப் பாரமாகத் தெரிந்ததால், அதையும் அவிழ்த் தெரிந்துவிட்டு ஒரே கோவணம் மட்டும் கட்டிக்கொண்டு 'பாரனைத்தும் பொய்யெனத் துறந்த பட்டினத்துப்பிள்ளை போல் இகழ்ச்சி புகழ்ச்சி எல்லாம் விடுத்து, ஏகாந்தமாய்ப் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டுக்கொண்டு, பழநியம் பதியை அடைந்தார்கள். அங்கு சிலகாலம் யாரும் அறியா வண்ணம், திருவாவினன்குடி ஒற்றைக்கால் மண்டபத்தில் இருந்து தவம் புரிந்தார்கள். 'நம் சபாபதியார் வீட்டை விட்டுத் துறவியாய்ச் சென்றதிலிருந்து, தேடியலைந்த சுற் றத்தார்கள் பழநியில் இருப்பதாகக்கேள்விப்பட்டு பழநிக்கு வந்து அடிகளைக் கண்டு, வீட்டுக்கு வரும்படி வலுவந்தப் படுத்தி அழைத்துக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்து இல் லத்தில் வைத்து வேண்டியவரையில் புத்திமதியுஞ் சொல்லிப் பார்த்தார்கள். அவர்கள் கூறும் மொழிகள் ஒன்றும் அடி களாரின் செவியில் ஏறவில்லை. மௌனமாக இருந்தார் கள். இரண்டொரு நாட்சென்றதும், யாருமறியாமற்ப் போய்விட்டார்கள். இவ்வாறு சிதம்பரம், மதுரை, திருக்

கழுக்குன்றம் முதலிய இடங்களில் இருக்கும்போது கண்டு பிடித்துப் பலதடவை அழைத்துப் போய் வீட்டில் வைத்து பலவாறு சொல்லிப் பார்த்தார்கள். இப்படித் தொந்தரவு செய்வதைப் பார்த்த அடிகளார், ஒருநாள் அவர்களைப் பார்த்து, கோவணாண்டியாய் "ஊரெல்லாம் அட்டசோறு" நம்மதே என்று பசிவந்த போது கைப்பிச்சை வாங்கி அருந்திவிட்டு, ஏதோ சிவா என்று எங்கேயாவது குந்தி இருக்கிற என்னை, நீங்கள் இழுத்து வந்து வீட்டில் வைத்து வைத்து தொந்தரவு கொடுப்பது மிகத் துன்பமாயிருக்கின்றது. தயவுசெய்து என்போக்கில் தடைசெய்யாமல் விட்டு விட்டீர்களானால், பின்னர் உங்களுக்குப் பெரும் புகழும், பெரு நன்மையும் உண்டாகும் என்றார்கள். அக்கருத்தை யறியாத அவர்கள், அடிகளாரைப் பார்த்து, கோவணாண்டியாய்த் திரிவானேன், இப் பட்டாடை தருகிறோம் உடுத்திக்கொள், பருத்தி நூல் துணியைவிடத் தூய்மையுடையதல்லவா என்றார்கள். இல்லறத்திருந்து அந்தஞானத்தை அடைய முடியாதா? துறவியானால்தானா பிறவியறுக்க முடியும் இலேயேல் முடியாதா? வெனப்பலவாறு கூறினார்கள்

## தென்னாட்டுச்சிவதலயாத்திரை.

## மௌனமும், வடநாட்டுயாத்திரையும்.

இவைகளைக் கேட்ட அடிகளார், சரி இவர்களுக்கு நாம் சொல்லும் அறிவுரைகள் ஒன்றும் ஏறாது என்று. மௌனமாக இருந்துவிட்டார்கள். இரண்டு நாட் சென்றதும் யாருக்குந் தெரியாமல், வீட்டை விட்டு வெளியேறி ஒருநாளைக்கு மேல் ஒரு ஊரில் தங்காமல் போய்க்கொண்டே இருந்தார்கள். இவ்வாறு சென்று திருச்செந்தில் ஆண்டவனை முதலில் வணங்கிக்கொண்டு; பின் திருநெல்வேலி, திருவனந்தபுரம், உடுப்பி, சுப்பிரமணியம், மூகாம்பிகை, கோகர்ணம், மைசூர், கன்னடம், பம்பாய், ஹரித்துவாரம், ரிஷிகேசம், அயோத்தி, தெலுங்குநாடுகள், முதலிய பெரும் பெருந் தலங்களையும் இடை இடையேயுள்ள சிறுசிறு தலங்களையும் தரிசித்துக்கொண்டு காசியம்பதிக்குச் சென்று கங்கையில் மூழ்கி, விஸ்வநாதரையும், விசாலாட்சியையும்

வணங்கிக்கொண்டு அங்குள்ள நற்றுறவிகளோடு, நட்புக் கொண்டு நற்றவம் புரிந்துகொண்டு சில ஆண்டுகளிருந் தார்கள்.

## சந்நியாசம் பெறல்.

இவரது பக்குவநிலையைக்கண்ட ஞானாசிரியர் இவரை நாள் தோறும் ஐந்து வீடுகளில், கைப்பிச்சையேற்று உண்டு கொண்டே, வடநாடு யாத்திரை செய்து இமய மலையிலுள்ள சத்தியநாராயணம் என்னும் இடத்திற்கு வரும் படி கட்டளையிட்டார்கள். அங்ஙனமே சாது சுவாமிகள், சத்திய நாராயணத்தை அடைந்த பொழுது ஞானாசிரியர் அங்கே இவரை எதிர்பார்த்து வீற்றிருந்தார். ஞானாசிரி யரைப் பணிந்து நின்ற சாது சுவாமிகளுக்கு, அவர் அன்ன பூரணி உபாசனையை உபதேசித்து, துறவு நிலைக்குரிய காவி ஆடையை முறைப்படி தந்து, காசியிலிருந்து அன்னபூர ணியை உபாசனை செய்யும்படி பணித்தார். சுவாமிகள் அங் ஙனமே சில ஆண்டுகள் அங்கு இருந்து உபாசித்தார்கள்.

## சாது சுவாமிகள் ஆதல்.

அடிகளார் அன்று முதல் கல்லாடையுடுத்து காவித் தலைப்பாகை தரித்து, கையில் நெற்றிமட்டத் தண்டத்தைப் பிடித்து தென்னாடாகிய நன்னாட்டுக்குத் திரும்பி வந்து தில்லையம்பதியை அடைந்து, அம்பலவாணனை ஆர்வத்தோடு வணங்கி விட்டு, முன்னர் தமக்கு திரு ஐந்தெழுத்தை உப தேசித்தருளிய மாதவமௌனசுவாமிகள் ஆச்சிரமம் சென்று அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கி, எழுந்து இரு கைகளை யுஞ் சிரமேற்குவித்தவண்ணம் நின்றார்கள். அதைக்கண்ட மௌன சுவாமிகள் அடங்கா மகிழ்ச்சியுடன் "ஓ சாது" வருக வருக, என்று அருகழைத்து இருக்கும்படி செய்து பக்கத்தில் நிற்கும் அன்பர்களைப் பார்த்து இவர் மகா சாது இவரைஎல்லவரும் வணங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்ல அவர்கள் எல்லோரும் அப்படியே நமது அடிகளாரின் திரு வடியில் வீழ்ந்து வணங்கி எழுந்து திருநீறுபெற்றுக்கொண் டார்கள். மௌன சுவாமிகள் அன்புகலந்த இனிய மொழி

களால் அளவளாவினார்கள். அன்றுமுதல் நமது அடிகளாருக்குச் சாது சுவாமிகள் எனும் திருப்பெயர் வழங்கலாயிற்று.

## பாம்பன் ஸ்ரீ குமரகுருதாச சுவாமிகளைக் காணல்.

அடிகளார் முற்பிறப்பில் முருகப்பெருமானை வழிபட்டுவிட்ட குறை முற்றுப்பெறுவான் முருகன் திருவருள் ஈர்க்கப்பெற்று, தில்லையம்பதிக்கு அடுத்துள்ள பின்னலூரில் இருந்து பெருந்தவம் புரிந்துவந்த பாம்பன் சுவாமிகள் என வழங்கும் உயர்மாதவ குமரகுருபரதாச சுவாமிகளிடம் போய் பணிந்து அவர்களிடம் சில நாளிருந்து தனது எண்ணத்தை சமயமறிந்து சுவாமிகளிடம் கூறி, அவர்களால் முருகப்பெருமான் பூசனை வாசனை முறைகளை உபதேசிக்கப் பெற்று விடைபெற்றுக்கொண்டு யாத்திரை செய்யலானார்கள். அவ்வாறு யாத்திரை செய்யும் போது, வேதாந்தத்தின் நுண்ணிய கருத்துக்களையும் முடிவுகளையும் அறிய ஆர்வங்கொண்டார்கள். அப்போது கோவிலூர் ஆதினம் அருணாசல சுவாமிகளைப் பெடிப்பட்டியிற் கண்டு வணங்கி அவர்களிடம் வேதாந்தத்தின் முடிவான (கீதாபாடியம், உபநிடதபாடியம், பிரமசூத்திர பாடியம் ஆகிய பிரஸ்தான திரையங்களின் சாரத்தை சிலமாதங்களில் கேட்டுத்தெரிந்து கொண்டார்கள்.

## காஷ்மீரம், ஸ்ரீநகரம் சேர்தல், (தேவி பூசை).

பின்னர் அடிகளார் பலசமயங்களின் கொள்கைகளையும் முடிபுகளையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தால் புறப்பட்டுச் சென்று, எவ்வெச் சமயத்தை அறிய முற்படுகிறார்களோ, அவ்வச் சமயத்தார்க்குரிய வேடங்களை தாங்கி அவரவர்களுடைய இந்தி முதலிய பாடங்களையுங் கற்று அவரவர்களிடம் பேசி, அவரவர் தம் கொள்கைகளையும் முடிபுகளையும் தெரிந்துகொண்டு, பின்னர் தன் சமய வேடத்துடன் முன்னம் சென்று காணாத பல தலங்களுக்குச் சென்று 'மூர்த்தி தல தீர்த்த' விசேடங்களை முறைப்படி கண்டு வணங்கிக்கொண்டு, நேப்பாளம் சென்று அங்குள்ள அரசராலும், அடியார்களாலும் போற்றப்பெற்று அங்கு

பல மாதங்கள் தங்கி இருந்தார்கள். பின்னர் தேவி பூசை செய்ய வேண்டுமென்று எண்ணி அங்கிருந்து ஸ்ரீநகரம் சென்று அறுபத்து நான்கு கலைகளும், அறுபத்து நான்கு படிகளாக அமைந்திருக்கும் சர்வக்ஞ பீடத்தை சில மாதக் கணக்கில் பூசித்து வணங்கிக்கொண்டிருந்து பின்னர், அதற் கடுத்துள்ளதும், தேவிபூசை செய்வதில் விருப்புடைய பலர் நிறைந்திருப்பதுமான காஷ்மீர் நகரத்திற்குப் போய் அங்கு உள்ளவர்களில் பெருஞ் செல்வந்தரும், முறையாகத் தேவி பூசை செய்பவரும், பெரியாரிடத்து நிறைந்த அன்புடைய வருமான ஒருவரின் இல்லத்தில் தங்கி யிருந்துகொண்டு ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் சர்வ சாஸ்திரங்களையும், அங்கையின் நெல்லிக்கனிபோல் உணர்ந்து முடிவான வேதாந்த மதத்தை நிறுவியபோதிலும், தேவி பூசையை முறையாகச் செய்வதும், மற்றவர்களையும் செய்யச் சொல்லு வதுமாகத்தானே இருந்தார்கள். ஆகவே, நாமும் அத் தேவி பூசை செய்யவேண்டிய அவசியமே என்று, அத் தேவி பூசைக் குரிய நூல்களை ஆராய்ந்து பூசைசெய்யத் தொடங்கினார்கள். அன்று முதல் முருகப்பெருமான் பூசையொடு, தேவி பூசை யுஞ்செய்வது வழக்கம் அடிகளாருக்கு ஏற்பட்டது. அங் கிருந்து பலநாள் செய்து பின்னர், திபேத்துக்குச் சென்று அங்குற்ற காளி கோயிலிற்றங்கி தேவி பூசை செய்து கொண்டு பலநாளிருந்தார்கள். அங்குள்ள அன்பர்கள் பலர் அடிகளாரிடம் அருள் பெற்றார்கள். பின்னர் அங் கிருந்து புறப்பட்டு திருக்கேதாரம், பத்திரிநாதம், கங்கோற் பத்தி, முதலிய கடினமான யாத்திரைகளையுஞ் செய்து முடித்துக்கொண்டு தென்னாட்டுக்குத் திரும்பி வந்தார்கள்,

## சண்டூர், குமாரசாமி தரிசனம்.

வரும்போது பல்லாரி மாவட்டத்திலுள்ள வாநகரித் திலிருந்து ஏழு மைல் தூரத்திலுள்ள யாரும்செல்லா இடத் திலுள்ள சண்டூர் குமார சுவாமி கோவிலுக்குச் சென்று, தங்கி ஓராண்டு தவம் புரிந்தார்கள். அக்கோவிலில் எழுந் தருளியுள்ள முருகன், அரச வடிவத்தோடு இருக்கின்றபடி யால், அவ்வூரில் அரசு செய்யும் அரசன், தன்னுடைய அரசையும், சொத்துக்களையும் சுவாமிக்கே உரியதாக்கிவிட்டு

தான் குமாரசுவாமியின் ஊழியனாக இருந்து அரசுசெலுத்தி
வரும் இயல்புடையவன். பெண்மக்கள் எவரும் அக்கோவி
லுக்கு போகக்கூடாதாம். பிரமச்சாரிகள் தான் அக்கோவிற்
பூசை செய்து வருகிறார்களாம். இத்தகைய தெய்வீகம்
பொருந்திய இடத்திலிருந்து தவம் புரியும் நம் அடிகளாரை
அவ்வரசன் வந்து வணங்கினான். உடனே அவன் மனதில்
இவர் ஓர் சிறந்த பெரியார் என்றுணர்ந்தான். அன்று
முதல் அடிகளார்க்கு வேண்டுவனவெல்லாம் நாடோறும்
கொண்டுவந்து கொடுத்து, வணங்கிக்கொண்டு வந்தான். அடி
களாரின் திருவடி தனது அரண்மனையில் படும்படி செய்ய
வேண்டுமென எண்ணி, பல நாள் விண்ணப்பித்துக்கொண்
டான். அடிகளும் ஆகட்டும் வருவோம் வருவோம் என
பலநாள் கழித்தார்கள். ஒருநாள் அரசன் அடிகளாரிடம்
வந்து வணங்கி நின்று, நமது குதிரைகளில் டில்லிமட்டம்
என்ற குதிரை ஒன்று அடங்காமல் மதங்கொண்டிருக்
கிறது, அதைச் சவாரிசெய்ய முடியவில்லை என்றான், அங்
ஙனமாயின் அதை இங்கு கொண்டுவருக என்றார்கள் அடிகள்
உடனே நாலைந்து பேர்கள் மல்லர்கள் கூடி, கடிவாளம் முத
லிய சேணங்களைப் பூட்டி வலுவந்தமாகஅப்பரியைப் பிடித்
திழுத்துக்கொண்டு வந்து அடிகளார் முன் நிறுத்தினார்கள்.
சேரமான் பெருமாள் நாயனார் திருவைந் தெழுத்தினை
குதிரையின் காதில் ஓதி, அதன்மீது ஏறிச்சென்று வெள்ளை
யானையின்மீதேறிக் கைலைக்குச்செல்லும் சுந்தரமூர்த்திநாய
னாருடன் அடிகள் கைலையை அடைந்தது போல், அடிகளார்
பசியபுல்லைக் கையிலெடுத்து, அதில் ஆறெழுத்தை ஓதி,
அந்தக் குதிரைக்குக்கொடுத்து, அரசன் முதலானவர்களைப்
பார்த்து, நீங்களும் எம்முடன் வாருங்கள் என்று பணித்து
விட்டு அடிகளார், அக்குதிரையின்மீது ஏறினார்கள். உடன்
அப்புரவி இடக்குப்பண்ணாமல் மிக அமைதியாக அரண்
மனைக்குக் கொண்டு சென்றது. உடனே அரசன் வெகு
வேகமாய் முன்னேபோய் நின்று, அடிகளாரை எதிர்கொண்
டழைத்து அரண்மனைக்குள் இட்டுப்போய் அரியணைமேல்
அமரச்செய்து, தன் சுற்றத்தாருடன் தானும் வணங்கி,
எழுந்து திருநீறு பெற்றுக்கொண்டார். அரசனது வேண்
டுகோளுக்கிணங்கி சிலநாள் அரண்மனையில் தங்கியிருந்து
தவம் புரிந்து அவனுக்கு அருள் செய்தார்கள். ஒருநாள்

அரசன் காணிக்கையாக அடிகளுக்கு விருப்பமானவற்றைக் கொடுக்க விழைகின்றேன் என்றான். அப்படியானால் ராச வடிவோடு இங்கெழுந்தருளியுள்ள குமார சுவாமிகளின் திருவுருவை ஓவியப்பட ரூபமாக வரைந்து தரல் வேண்டுமென்றார்கள். அவ்வாறே அரசன் கைதேர்ந்த ஓவியரைக் கொண்டு நன்றாக எழுதச் செய்வித்து கொண்டுவந்து அடிகளாரிடம் காணிக்கையாகச் செலுத்தினான். அதைப் பெற்று அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு வந்தார்கள். அந்தப்படம்தான், அடிகளாரின் மாணவரும், ஆச்சாள்புரம் திருவேங்கடம் பிள்ளை புதல்வரும், பெருநிலக்கிழாருமாகிய திருமிகு செல்வர் வெங்கடேசம் பிள்ளை அவர்களால் அடிகளார் தவத்திற்காக, கொள்ளிடக்கரை யருகில் மிக அழகாக அமைக்கப் பெற்றுள்ள, சரசுவதி விலாச நிலையத்தில். மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்து; சாதுக்களால் நாள் தோறும் பூசையும் செய்விக்கப்பெற்று வருகின்றதென்றால் அடிகளாரின் தவவலிமை எவ்வாறுளதெனை இயம்புவேம்.

## திருப்பதி மலை தவம்.

பின்னர் திருப்பதி மலைக்குச் சென்று, அங்கெழுந்தருளியிருக்கும் வேங்கடேசப் பெருமானைக் கண்களாரக் கண்டு வணங்கி; அம்மலையின்மேல் ஈசானியகோணத்துள்ள தீர்த்தத்தின் கீழ்ப்பாகத்தில் உள்ள; சித்தர் குகையில், தவஞ்செய்து கொண்டிருந்த ஒரு மகாயோகியைக் கண்டு அளவளாவி அவரிடம் அன்புகொண்டு அவருடன் அந்தக் குகையிலிருந்து சிலகாலம் தவம் புரிந்தார்கள். அக்காலத்தில் அடிகளாருக்குப் பிச்சை வாங்கி வந்து கொடுத்து, உண்ணச் செய்வார். ஆனால் அந்த மகாயோகி அறுசுவையோடு கூடிய எந்த உணவையும் உண்பதில்லை. புனல் இலை, கனி, காய் கிழங்குகளில் எதையாவது பசிவந்த போது அருந்தி விட்டிருப்பவர், நமது அடிகளாருக்காகவே வெளியேபோய் பிச்சை எடுத்துக்கொண்டு வருவார். நமது அடிகளார் சில சமயம் உறங்கிக்கொண்டிருந்தாலும், தலையைத் தூக்கித் தனது தொடையின் மேல் வைத்து, விழிப்புறச்செய்து ஊட்டுவார்கள் என்றால், அம் மகாயோகிகள் நமது அடிகளாரைத் தம்மினுஞ் சிறந்த பெரியாராகக் கருதினார்களென்

KOVILOOR MADALAYAM

பது தெற்றென விளங்குகிறதல்லவா? அவ்வாறு அம் மகாயோகிகளால் உபசரிக்கப்பெற்று, தவம்புரிந்துகொண்டிருந்த திருப்பதி மலையை விட்டு, அம் மகாயோகியிடம், விடைபெற்றுக்கொண்டு கீழிறங்கி தெற்குநோக்கி யாத்திரையாக வந்துகொண்டிருக்கும் போது, ஒருநாள் அடிகளார் பரிபூரண பரமானந்தத்தில் மூழ்கித் திளைத்தற்கு ஏதுவாகிய நிருவிகற்ப சமாதிநிலை கைகூடவில்லையே என ஐயுற்று அந்நிலையை எப்பெரியார் அருள் செய்வாரோ? என்ற ஏக்கத்தோடு, தலங்கள்தோறும் தேடிக்கொண்டே வருகின்றார்கள்.

## முன்னே போதக்காட்சியால் கண்ட ஸ்ரீ நந்தியடிகளை சிறப்புக் காட்சியிற்கண்டு வழிபடுதல்.

அவ்வமயம் புதுவையைச் சார்ந்த நற்காற்றூருக் கடுத்துள்ள வெள்ளாளன் குப்பத்தில். சிவாநுபவச்செல்வரும், சகல சாஸ்திர பண்டிதரும், ஆசிரிய இலக்கணமுழுது நிரம்பப்பெற்றவருமான உயர்மாதவ நந்தியடி சுவாமிகள் என்னும் பெரியாரைக் கண்டார்கள். கண்டவுடனே தமதுள்ளத்தில் ஓர் உணர்ச்சியும், உடம்பெல்லாம் மயிர்கூச்சலும் அன்பின் பெருக்கை அடக்கமுடியாது வழியும் இன்பக் கண்ணீரும் கம்பலையுமாக பலகால் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றார்கள். அதுகண்ட குரு நந்தியடிகளார், நம் சாதுமா முனிவர் பக்குவ நிலையையும், குறிக்கோளையும் உணர்ந்து அழைத்துப்போய் தனியிடத்திருத்தி விதிப்படி தீட்சை செய்து தமது அருள்நோக்கால், மனதை அமைதியுறச்செய்து பரந்த விடயந்தோன்றாமல், பரமானந்தந்தோன்றுதற்கேதுவாகிற ஒரு மொழியைச் செவியில் ஓதி, அருள் நிலையை விளக்கினார்கள். உடனே குருநாதன் திருவருளால் நமது அடிகளார் நிருவிகற்ப நிலையையடைந்து பேரின்பத்திற் றிளைத்து தன்னையுந் தனக்காதாரத் தலைவனையும் பிரிவற்ற சச்சிதானந்த அத்வைத பரிபூரணவடிவினை ஐயந்திரிபறவுணர்ந்து இன்பவடிவாய் விளங்கினார்கள்.

## அருட்குரு வழி நிற்றல்.

அதனால் அன்றுமுதல் உயர்மாதவ நந்தியடிகளாரை தமக்கு அருட்குருவாய் (விகித குருவாய்) கொண்டு உடற்குயிர்போல், கட்கிமை போல் அவர் தம் திருமேனியை பாதுகாத்தும், உடம்பின் நிழல்போல் குருவை விட்டு நீங்காது மிருந்தார்கள். அவ்வாறிருந்து வரும்போது திருநந்தி அடிகளாருக்கு ரசவாதத்தால் தங்கஞ்செய்யக்கூடியவன்மை இருப்பதை நமது அடிகளார் தெரிந்து கொண்டு, அவ்வித்தையை அறிய வேட்கையுடையராக இருந்தார்கள். அதை குறிப்பால் நந்தியடிகளார் அறிந்துகொண்டு, ஒருநாள் இருவரும் தனியாக ஓரிடத்தில் இருக்கும் போது, அப்பா சாது, அதோ தெரிகிற மூலிகையின் இலையைப் பறித்துக்கொண்டு வா, என்று கட்டளையிட்டார்கள். அப்படியே அடிகளார், அம் மூலிகையின் இலையைப் பறித்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதை அப்படியே கசக்கி, ஒரு கரித் துண்டைக்குடைந்து பள்ளமாக்கி, அதில் கசக்கிய பச்சிலையை வைத்து அதன் நடுவில் ஒரு செம்புத்தம்படியை வைத்துப் பொதிந்து, மேலும் ஒரு கரித்துண்டை வைத்து மூடிசீலைமண் செய்து, பத்து எருவில் புடமிட்டு எடுத்து, சாது, இதைப்பார் என்றார்கள். பார்க்கும்போது அந்தச் செம்புத்தம்படி தங்கமாகக் காணப்பட்டது. இதுதானப்பா நீ விரும்பியது இதோ ஆகிவிட்டது இதனால் என்னகும், மூவேட்டுணை விட்டவனுக்கு இதனால் என்ன பயன். இதனால் ஏதாவது புருடார்த்தமுண்டா. மூவாசையும் அற்ற முனிவர்கள் இதை தூசுக்குச் சமமாகக் கருதுவார்களேயல்லாமல், இதை ஒரு பொருளாய் மதிக்கமாட்டார்கள் என்றார்கள். உடனே, அடிகளார் குருநாதரின் வல்லமை, வைராக்கியம், ஞானம் அமைதி முதலிய பண்புகளைக்கண்டு வியப்பும் அச்சமும் அடைந்து, குருநாதன் மொழிந்த அம்மொழிகளைப் பொன்மொழியாக்கி உள்ளத்திற்பதித்துக் கொண்டார்கள்.

## பழநி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணியின் அருளால் பழநியம்பதியை யடைதல்.

இவ்வாறிருவருமிருந்து வரும்போது ஒரு நாளில், நந்தியடிகளார் யோக நித்திரையிலிருக்கும்போது, பழநியாண்டவன் தண்டாயுதபாணியாகக் காட்சியளித்து, என் சாதுவை என்னிடம் அனுப்புவாயாக என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். உடனே நந்தியடிகள் யோகநிலைகலைந்து விழிப்புற்று எழுந்து வியப்புற்று, சாதுசுவாமிகளைநோக்கி, அப்பா சாதுவே, நின்னால் பழநியில் பல தொண்டுகள் நிறைவேற வேண்டியிருக்கிறது போலத் தோன்றுகிறது. ஆகவே, நமது பழநியப்பன் உன்மேல் விருப்பங்கொண்டு, பழநியம்பதிக்கு தன்னிடம் அனுப்பிவைக்கும்படி கட்டளையிட்டான் அவனது திருவிளையாடல் என்னே! ஆதலால் நீ, இன்றே பழநிக்குச் செல்வாயாக என்று, கட்டளையிட்டார்கள். அதைக்கேட்ட நமது அடிகளார் திடுக்கிட்டு, பழநியாண்டவன் கருணையிருந்ததா வென்று வியப்புற்று குருநாதரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு, ஆசிரியரை விட்டுப் பிரிதற்கு மிகவருந்தி, அன்புநீர் பெருக வணங்கி விடைபெற்று, அரிதின்நீங்கி பழநியம்பதிக்கு வந்து, தமது தலைவனாகிய தண்டாயுதபாணியைக் கண்டு, வணங்கிக்கொண்டு, கைப்பிச்சையேற்று அருந்திக்கொண்டு, திருவாவினன்குடியில், ஒற்றைக்கால் மண்டபத்தில் சில ஆண்டுகளும், திருவாவினன்குடி ஆலயத்தில் சில ஆண்டுகளும், மலைக்குத் தென்பாலுள்ள குகையாகிய ஆதியாச்சிரமத்தில், சில ஆண்டுகளுமாக இருந்து அருந்தவம் புரிந்து வந்தார்கள்.

## பழநிமலையில் தவமியற்றல், வறியவர் பசிகண்டு இறங்குதல்.

அக்காலத்தில் அங்குவந்துகுழுமிய அடியார்கள் ஏழை மொண்டி முடம், கண் குருடு ஆகிய இவர்கள் பசியால் முகம் வாடி நிற்பதைக் கண்டு மிகவும் வருந்தி மனமுருகி, தம்மிடம் ஒருகாசும் இல்லாவிடினும், உணவுகளை விற்கும் சிற்றுண்டிக் கடைக்காரரிடமும், உணவுக் கடைக்காரரிடமும்

சொல்லி சிற்றுண்டிகளையும், சோறு முதலியவைகளையும், பசியால் வாடும் அனைவருக்கும், வேண்டிய அளவு கொடுக்கும்படி சொல்வார்கள். அப்படியே அவர்களும் தினமும் கொடுப்பார்கள். அடிகளார் தமக்காக காசுகொடுத்தாலல்லாது தாங்களாகப் போய் இவ்வளவு பாக்கி ஏற்பட்டுவிட்டது கொடுங்கள் எனக் கேட்கமாட்டார்கள். மேலு மேலும் அடிகளார் கட்டளைப்படி கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு கடைக்காரரிடத்திலும், நூறு ஆயிரமாக பாக்கி ஏற்பட்டு விடுமேயானால், அப்போது அடிகளார், முருகா! உன் மக்கள் பசி தணிப்பதற்காக ஏற்பட்ட கடனை நீயல்லாது வேறு யார் கொடுக்கவல்லார். ஆகவே நீதான் கொடுக்கவேண்டுமென்று திருவுளத்தில் எண்ணுவார்கள். உடனே அன்றைக்கே யாராவது பணக்காரராகிய ஓரன்பர் வந்து அடிகளாரை வணங்கி, திருவுளப்படி அந்தக் கடனை யானே கொடுத்துவிடுகின்றேன் என்று விண்ணப்பித்து அவர்களைக் கூப்பிட்டு ஏற்படும் பாக்கித்தொகைகள் முழுமையும் கொடுத்துத் தீர்த்துவிட்டு, இனிமேலும் இதற்காக எவ்வளவு கடன் ஏற்பட்டாலும் அடியேன் கொடுக்கச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு செல்வார்கள்.

## இரக்கத்தின் உருவமான அடிகளார்.

நல்லவனே கேள், உலகுபகாரம் ஞானிகள் விவகாரம் என்னும் மறைமொழிப்படி, அடிகளார் முற்றத்துறந்த முனிவராக இருந்த போதிலும். தமதுள்ளத்தில் நிறைந்து ததும்பும் அருளுடைமையான் கைமாறு வேண்டாக் கடப்பாடு செய்ய தமதுள்ளம் உந்துதலான் தான் கைப்பிச்சையேற்றருந்தி வரினும் அடியார்கட்கும் அற்றவர்கட்கும் பசிப்பிணி போக்கும் அரும்பெரும் பணியில் ஈடுபடச்செய்தருளவேண்டுமென பழநியாண்டவனை வேண்டிக்கொண்டிருந்தார்கள்.

அவ்வாறிருக்கும் போது, ஒருநாள் ஒரு அம்மையார் உமையம்மையோவென எண்ணும்படியான தோற்றத்தோடு அடிகளாரின் முன்வந்து நின்று வணங்கி அடிகாள் இன்று

எங்கள் வீட்டில் உணவுகொள்ள வரவேண்டும் என அழைத்தார்கள். அம்மையே! இங்கு என்போன்ற அடியார்களும் ஏழைகளும் பலர் பசிக்கொடுமையால் வாடும்போது, யான் மட்டிலும் உங்கள் வீட்டிற்கு வந்து உணவுண்டு வருவது தகுமா! யான் எப்போதும் கைப்பிச்சை வாங்கி அருந்துபவன், ஆகையால் இன்றைக்கும் அவர்கள்போல் பிச்சையே வாங்கி அருந்துகிறேன் என்றார்கள். அதுகேட்ட அவ்வம்மையார், அப்படியாயின் நான் அரிசி கொண்டுவந்து தருகிறேன் சமையல் செய்து எல்லோரும் சாப்பிடுங்கள் என்றார்கள். அதற்கு அடிகளார் சம்மதப்பட்டார்கள். உடனே ஒன்பது படி அரிசியும், உப்பும் அவ்வம்மையார் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதை அடிகளார் அன்போடு வாங்கிக்கொண்டு, இப்போது பெரும் பெரும் அண்டாக்கள் வைத்துச் சமையல் செய்கின்ற புளியமரத்தடிக்கு கொண்டு வந்தார்கள். அடிகளாரின் மாணவர் ஒருவர் நான் எட்டணா வைத்திருக்கின்றேன், அதற்கு மண்பாண்டங்கள் வாங்கி வருகிறேன் என்றார்கள். சரி, செய் என்றார்கள். உடனே, பாண்டங்களை வாங்கி வந்தார்கள். மற்றொருவர், என்னிடம் கொஞ்சம் சில்லரையிருக்கிறது, இதற்குப் புளி மிளகாய் வாங்கி வருகிறேனென்று போய் வாங்கி வந்தார், மற்றுமுள்ளவர்கள், மலையோரங்களில் சென்று, விறகும் பொறுக்கிவந்தார்கள். எல்லோரும் ஒன்றுசேர்ந்து கற்களை எடுத்துவந்து. அடுப்பு வைத்து, நெருப்பு மூட்டி, மட்பாண்டத்தை வைத்து உலைநீர்பெய்து அந்த அரிசியைப்போட்டு, கஞ்சியாகக் காய்ச்சி இறக்கி, மிளகாய், புளி, உப்பு மூன்றையும் ஒரு துவையலாக அரைத்து எடுத்துவைத்துக்கொண்டு சுமார் நாற்பது ஐம்பது பேர்கள், அடிகளாருடனிருந்து கஞ்சியை அருந்திக் களிப்படைந்தார்கள்.

## அருட்பரை தரிசனம்.

அன்றிரவு அடிகளார் துயில்கொள்ளும் போது, இன்று யாம் சில அடியார்களுடனிருந்து உணவருந்தினோம். நாளை அவர்களை உணவுக்கு எங்கே போகச்சொல்வது என்ற சிந்தனையோடு அரிதுயிலில் அமர்ந்திருக்கும்போது, திருவா

வினன்குடி (கொற்றவை) காளியம்மை எதிர்வந்து நின்று, அப்பா சாது, நீயேன் கவலைப்படுகிறாய், உன் எண்ணங்கள் எல்லாம் ஈடேற்றிவைக்க நானிருக்கிறேன். மக்களின் துணையாக தைரியமாக இரு, எல்லாம் நடைபெறும். என்று சொல்லி மறைந்தனள். உடனே அடிகளார் விழிப்புற்று வியப்புற்று அம்மையின் திருவருளை எண்ணி எண்ணிக் கண்ணீர் மல்கி நின்றார்கள்.

அன்று முதல் பழநியப்பனைத் தரிசிக்க வரும் அன்பர்களில், யாரேனும் ஒரு மெய்யன்பர் தாமே வந்து அடிகளாரை வணங்கி ஒருமூடை அரிசியும், அதற்கு வேண்டியவைகளும் தருகிறேன், அடியார்கட்கும், ஏழைகட்கும் உணவளிக்கட்டும் என்று, சொல்லிக் கொண்டுவந்து கொடுப்பார்கள், அதைச் சமைத்து வழங்கப்படும்.

பல்லாழியன்ற வள்ம்பெருகப் பரமன் அடியார்,

எல்லோரும் அமுதருந்தல்.

அப்படியே நாள்தோறும் அவ்வன்னதானமானது பெருகி, நாளடைவில் பழநி தேவஸ்தானக் கட்டளை இராக்கால மடத்தைத் தன்வயமாக்கி, அதை ஒரே பந்தியில் எழு நூற்றம்பது பேர்களிருந்து உணவருந்தும்படியான அளவில், பெரிய கட்டிடங்கட்டி அதற்குச் "சண்முக விலாச அன்னதான நிலையம்" எனப்பெயரும் பொறித்து, அதில் அக்னிகழிவு கந்தசஷ்டி உற்சவம், பங்குனி உத்திரத் திருவிழா, ஆடிக் கார்த்திகை, மாதக்கார்த்திகைகள், விசாகநன்னாள் முதலிய சிறந்த நாட்களில், பலமூடை அரிசிகளை வடித்துப் பலவகை கறி வகைகளோடு முப்பழம், அப்பளம், வடை தீம்பாலமுத முதலியவற்றோடு பெருவிருந்தளித்து, ஆயிரக்கணக்கான ஏழைகளும், அடியார்களும் உண்டு களித்து, வாயார வாழ்த்திச் செல்லும்படியான நிலையில் இருப்பதை யாவருமறிந்ததே.

இஃதல்லாமல்,

4803 01:33

## பழநிப்பெருமானுக்கு மகாபிஷேகமும், கண்கொள்ளாக் காட்சியும்.

பழநியாண்டவனுக்கு இதற்கு முன்னும், இதுவரையும் மன்னர் மன்னரும் செய்யாத வகையில், பால், தயிர், நெய், தேன் இளநீர், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், திருநீறு, சந்தனம் முதலிய அபிடேக திரவியங்கள் ஒவ்வொரு வகைக்கும் நூற்றெட்டு நூற்றெட்டுக் குடங்கள் எண்ணி எண்ணிக் கொடுத்துச் செய்யும் மாபெரும் குடமுழுக்கு விழா (மகாபிஷேக)வை தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் செய்து மலையுச்சியிலிருந்து அடிவாரம் வரை, நாலு பக்கங்களிலும் பாலும் தேனும் அருவி போல் வழிந்தோடும்படி செய்த காட்சியைக்கண்டு கண்டு களிக்காதவர் தண்டமிழ் நாட்டில் இலராவர். இதே போல் முருகன் எழுந்தருளியுள்ள திருப்பதிகளான ஆறுபடைவீடுகள், விராலிமலை, மருதமலை முதலிய இடங்களிலும், மாபெருங் குடமுழுக்கு விழாச் செய்து வைத்தார்கள்.

இஃதல்லாமல், பழநி தண்டாயுதபணிக்கு காலைசந்தி முதல் அர்த்தசாமம் வரை செய்யும்படி அடிகளால் ஏற்படுத்திய பூசை படித்தரங்களே, தேவஸ்தான பூசைப்படித் தரங்களைவிட சிறப்பாக இன்னும் அடிகளாரின் மாணவர்களான அடியார்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

## மட்டிலாத சஷ்டிவிழா காட்சி.

அதுவல்லாமல், கந்தர் சஷ்டி முதலிய விசேஷ நாட்களில் தண்டாயுதபாணிக்கு அலங்காரஞ் செய்ய, இதுவரை எவரும் செய்யாத காட்சியாக, நூற்றுக்கணக்கான கூடைகளில் நிறைய பல்வகை மலர்களைப் புகைவண்டி மூலமாய்ப் பலவூர்களிலிருந்து தருவித்து நூற்றுக்கணக்கான அடியார்களைக்கொண்டு இரவு பகலாக இருந்து பலவித மாலைகளாக தொடுக்கும்படி செய்து, எடுத்துக்கொண்டு போய் வித வித

மாக முருகனை அலங்கரித்து திருவுலாச் செய்வித்து, அவனது திருக்கோலத்தைத் அன்பர்களோடு உடனிருந்து கண்டு களித்த காட்சியை யாவருமறக்கற்பாலதன்று.

## குருபரர் வருகையும், தரிசனமும்.

இவ்வாறு அடிகளார் பழநியம்பதியில், பெருந் தவமும், பேரறமும் செய்துகொண்டு, பழநியாண்டவருக்கு அபிடேகமும், ஆறுகால பூசை முதலிய சிறப்புகளையும் நடத்திக்கொண்டிருக்கும் போது, தமது குருநாதராகிய திரு நந்தியடிகளார், தனக்கென ஓர் இடம் அமைத்துக் கொண்டிராமல், திருக்கழுக்குன்றம், சிதம்பரம், திருநெல்வேலி, மதுரை, திருச்செந்தூர், குற்றாலம், பாபவிநாசம் முதலிய தலங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, அவ்விடங்களில் சிற்சில நாள் தங்கியிருந்து விடைபெற்றுக்கொண்டு பழநியம்பதிக்கு வந்தார்கள். தமது குருநாதரின் வருகையை அறிந்து அடிகளார் எதிர்சென்று வணங்கி, அழைத்துவந்து, கிருஷ்ணசாமி பண்டாரத்தையா மடத்தை (குருநாதர் இருப்பதற்கு) ஏற்பாடு செய்து, அதில் இருக்கும்படி செய்து குருநாதருக்கு வேண்டுவன யாவும் அளித்துத் தொண்டு செய்துவந்தார்கள். தனது மாணவருடைய குருபத்தியையும், அவர் பழநியம்பதியிற் செய்துவரும் அரும்பெருந் தொண்டுகளையும், அன்னதானங்களையும், மற்றைய அறங்களையும், அவருடைய அருந் தவத்தையும், அவர் தம் குறிக்கோளையும் கண்ணாரக் கண்டு களிபெருவகை யெய்தி, மேலும் மேலும் திருவருட் செல்வம் பெருகும்படி, நமது அடிகளாருக்கு குரு நந்தியடிகளார், அருள்புரிந்து மாணவரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். பின்பு,

## குருபரர் சமாதி அடைதல், சமாதி வழிபாடும், குருபூசையும்.

நந்தியடிகளார் அவ்விடம் விட்டகன்று வடக்கு நோக்கிச் சென்று திருச்சிராப்பள்ளிக்கடுத்த லால்குடிக்கு அண்மையிலுள்ள, பெருவளநல்லூரை அடைந்து, தமது மாணவர் பண்ணையார் திரு கிருஷ்ண ரெட்டியார், அவர் தம் இல்லக்கிழத்தியார் இருவர் தம் அன்புக்குவயமாய், அவர் தம் திருமனையில் சிலநாள் இருந்து, அவ்வம்மையாருக்கும், அங்குள்ள அன்பர்களுக்கும், அருள்புரிந்து கொண்டிருந்து கி. பி. ஆண்டுக்குச் சரியான பிரபவ-ஆண்டு, மாசி-மீ பதின்மூன்றாம் நாள், அசுவினியொடு கூடிய சனிக்கிழமை, அன்று பரிபூர்ண ஒழிவிலொடுக்க சமாதியடைந்தார்கள். அத்திருமேனியை, பண்ணையாரவர்கள் தமது புஞ்சை நிலத்தில் சமாதி வைத்து, அதற்குப் பத்தாம் நாள் செய்ய வேண்டிய முத்திவழிபாட்டை அவர் தம் மாணவரைக் கொண்டே சிறப்பாக நடத்திவைக்க வேண்டுமென்றெண்ணி அவ்வமயம் அங்கு வந்திருந்த நந்தியடிகளாரின் மாணவர்களிலொருவராகிய, சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சாமி நாயக்கன் தெருவிலுள்ள போலீஸ் சூப்பரென்டண்டு திரு. தேவராச முதலியார் அவர்கள் மூலம், சாதுமா முனிவர் நந்தியடிகளாரின் முதல் மாணவர் என்பதையும், அவர் தம் பெருமையையும் இருக்கும் இடத்தையும் தெரிந்து, நமது அடிகளாருக்கு தங்கள் குருநாதராகிய, குரு நந்தியடிகளார் அடக்கமாகி விட்டார்கள். அடிகளார் வந்திருந்து தங்கள் குருநாதரின் பத்தாம் நாள் முத்திவழிபாட்டைச் சிறப்பாக செய்துவைக்க வேண்டுகிறேன் எனப் பழநிக்குக் கடிதம் எழுதி அனுப்பினார்கள். அக்கடிதம் கண்டவுடனே குருநாதரின் பிரிவுக்காக மிக வருந்தினார்கள். பின்னர், எல்லாம் பழநியாண்டவன் செயலென ஆறுதலடைந்து உடனே, தம் குருநாதரின் முத்திவழிபாட்டிற்கு வேண்டுவனவெல்லாம் உடன்கொண்டு, பல செல்வர்தரும், அடியார் கூட்டமும் தம்மைச் சூழ்ந்துவரப் புறப்பட்டுச் சென்று, கண்டார் யாவரும் இரும்பூதெய்த பெருவளநல்லூருக்கு வந்து, கடிதம் எழுதிய பண்ணையார் வீட்டிலிறங்கினார்கள். அதுகண்ட ரெட்டியாரவர்களும், அவர்தம் மனைவியாரும் அடிகளாரை வணங்கி வரவேற்று, அகமகிழ்ந்து அடிகளார் வரவுக்காகவே

எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம், இனி குருநாதரின் முத்தி வழிபாட்டுக்கு என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அவை களைக் கட்டளையிட்டால், செய்துமுடிக்கச் சித்தமாக இருக் கின்றோம் என்றார்கள். அவ்வாறே செய்யவேண்டிய வேலை களையெல்லாம் பண்ணையாளரைக் கொண்டே செய்து முடிக் கும்படி செய்து திரு. கிருஷ்ண ரெட்டியார் அவர்களையே எல்லாவற்றிற்கும் முதன்மையாக வைத்துக்கொண்டு, பத்தாம் நாள் செய்யவேண்டிய முத்திவழிபாட்டைச் சிறப்பாக நடத்தி முடித்தார்கள், பின்னர், நந்தியடிகள் சமாதியைக் கோவி லாகக் கட்டி, அதில் குருநாதரை நந்தியம்பெருமான் வடிவாக அமைத்து, பிரதிஷ்டை செய்து, அதற்குப் பக்கத்தில் நந்தி அடிகள் ஆச்சிரமமும் ஒன்று கட்டுவித்து, தமது மாணவ ராகிய அடியார்கள் சிலரை, அதிலிருக்கும்படி செய்து நந்தி யம்பெருமானுக்கு நித்திய நைமித்திக பூசைமுதலியவைகளை நடத்திவரும்படி செய்தும், ஆண்டுகள் தோறும், மாசி அசு வினி நாளில் குருநாதரின் குருபூசையை (பண்ணையாளரை முதன்மையாக வைத்துக்கொண்டு) அபிடேக அலங்கார தூப தீப நைவேத்திய மாகேசுவர பூசை முதலியவற்றை யும் சிறப்புறச் செய்து, வந்த அடியார்களையெல்லாம் ஒரு வாரம்வரையில் இருந்து உபசரித்து, உண்ணும்போதெல்லாம் வெள்ளிக்குவளையால் நெய்யை அள்ளி அள்ளி கைநிறைய வார்த்துக் குடிக்கச் செய்து. போதும் போதும் என அடி யார்கள் கூறும் பதிலைக் கேட்டு வள்ளண்மையோடு வந்த அடியார்கட்கெல்லாம். இரண்டு வேஷ்டியும், அவரவர் தகு திக்கேற்ப வழிச்செலவுக்குப் பணமும் கொடுத்து அனுப்பு வார்கள். இந்த வைபவத்தைக் கண்டு களிக்காத துறவிகள் தமிழ்நாட்டில் ஒருவருமில்லை எனலாம். இவ்வாறு பல ஆண்டுகள் பெருவளநல்லூருக்கு வந்து குருபூசையை நடாத்தி, பண்ணையாளரவர்களால் உபசரிக்கப்பெற்றிருந்து பின் விடைபெற்று, பழநியம்பதிக்குச் செல்வார்கள்.

நிற்க, அடிகளாரின் தவ வலிமையால், பழநியம்பதி யிலும், மற்றைய இடங்களிலும், சமயவளர்ச்சிக்காகச்செய்த தொண்டுகளும், திருப்பணிகளும், தெய்வப் பிரதிஷ்டை களும், சிவவேள்விகளும். எண்ணிலவாம். அவைகளுள் சில வற்றை இங்கு கூறுவாம். பழநியம்பதியில் தமது மாண

வர்களும், அடியார்களும் இருந்து, இறைபணியும் இயமநிய மாதி தவப்பணியும், செய்வதற்காக (சிவகெங்கைத் தாலூகா காளையார்மங்கலம் திரு. வீரணன் அம்பலகாரர் அவர்களைக் கொண்டு, அடியார் பெரும் பொருட் செலவில்) பழநி மலைக்கு மேற்குப்பிரகாரத்தில் தென் பக்கத்தில், மிக அழகிய நந்தி யடிகள் ஆச்சிரமத்தையும், கட்டுவித்தார்கள்.

## அறச் சாலைகளும், தவச் சாலைகளும்.

பழநிக்கு யாத்திரையாக வரும் இல்லறத்தார், தங்குவதற்காக, மலைக்கு வடமேற்கில் அருட்சோதி வீதியில், மாபெரும் நந்தியடிகள் நிலையத்தைக் கட்டுவித்தும், சண்முக விலாச அன்னதான நிலயத்திற்கண்மையில், பழநியாண்டவருக்கு அபிடேக சந்தனம் அரைக்கவும், தினைமா இடிக்கவும் கட்டிடத்தை அமைத்தும், பழநி வரதமாற்றுக்கருகில் ஏறக்குறைய முப்பத்தேழு ஏக்கர் நிலத்தை வாங்கி, அவ்விடத்தில் சோர்க்காச்சிரமம் எனப்பெயரிட்டு, அதில் தாயுமானவர் ஆச்சிரமம், பசுமடம் முதலியவைகளை அமைத்தும் வைத்தார்கள்.

## துர்க்காலய நிர்மாணம், சிவ. கணேச குகப்பிரதிஷ்டை.

ஈரோடு, திரு. முருகேச முதலியார் அவர்களைக் கொண்டு, நான்கு அழகிய கொற்றவை, காளி முதலான தெய்வத் திருவச்சிலைகளைக் கண்டவர் கண்களையும், மனத்தையும் கவர்ந்து தன்வயப்படுத்தும்படி, சிறந்த சிற்பிகளை கொண்டு செய்து, பழநி மலையைச் சுற்றிலும், முன்னரே வடக்கிலிருக்கும் கோற்றவையையன்றி, கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலுமாக மூன்று கோவில்களை அமைத்து, மூன்று கொற்றவை (காளிகளை) பிரதிஷ்டை செய்தும், சொர்க்காச்சிரமத்தில் ஒரு கொற்றவையைப் பிரதிஷ்டை செய்தும், பழநியிலும், கொங்குநாட்டிலும், மற்றும் பல இடங்களிலும், பல பிள்ளையார் கோவில்களைக் கட்டுவித்தும், அவைகளில் பல பிள்ளையார் பிரதிஷ்டைகளைச் செய்தும்,

வேல், சிவசூலம் முதலிய பிரதிஷ்டைகளைப் பலவிடங்களில் செய்துவைத்தும், அன்பர்கள் வழிபாடு செய்து உய்யுமாறு செய்திருக்கிறார்கள்.

## மண்டபப் பணிகள்.

இஃதன்றி, தம்மைக் காணவரும் மெய்யன்பர்கட்கு, கட்டளையிட்டு, பழநிமலை அடிவாரத்திலிருந்து மலை உச்சி வரையில், ஏறிப்போகும் மக்களுக்கு வசதியாக, புதிய வகையில் சிமிண்டு காங்கிரெட்டு மண்டபங்களும், அதில் இருந்து இளைப்பாறிச்செல்ல கருங்கல் தவிசுகளும் அமைக்கும்படி செய்தும், கடைசி வரையில் விசாலமாக கருங்கல் படிக்கட்டுகளையும் கட்டி, அவரவர்களின் பெயர்களைப் பொறிக்கும்படி செய்திருக்கிறார்கள்.

## அறப்பெருஞ் செல்வர்கள்.

இஃதன்றி, தமது மெய்யன்பர்களில் ஒருவராகிய, பெருஞ்செல்வர் ஈரோடு முருகேச முதலியார் அவர்களைக் கொண்டு (பழநியாண்டவன் மலைமேல் பவனிவருதற்கு) கண்ணைக் கவரும் அழகுள்ளதும்,பெரும் பொருட்செலவான துமான தங்க ரதமும், மயில்வாகனமும் செய்துவைத்திருக் கிறார்கள்.

மற்றும், தமது மெய்யன்பர்களில் ஒருவராகிய, ஆச் சாள்புரம் பெருநிலக்கிழார், திரு. வேங்கடேசம் பிள்ளை, முன்னர் கூறிய ஈரோடு திரு. முருகேச முதலியார் ஆகிய இருவரின் பெரும்பொருட் செலவில், சிதம்பரத்தில், இளமையாக்கினர் கோவிற்பக்கத்தில், 'அகத்தியராசிரமம்' ஒன்று நிறுவி, அதில் அகத்தியற்கும், உலோபாமுத்திரை அம்மையார்க்கும் கோவில்கள் கட்டி, அதில் அவ்விருவர் தம் தெய்வத் திருவுருவச்சிலைகளை மந்திரபூர்வமாக, பழநி தவத்

திரு ஈசானிய சிவாசாரியாரவர்களைக்கொண்டு பிரதிஷ்டை செய்யும்படி செய்வித்தும், அவர்களைக்கொண்டே ஒரு மண்டலம் சிவவேள்வி நடாத்தியும், திருவண்ணாமலை சரசுவதி விலாசம் முதலிய பலவிடங்களில், சிவவேள்விகள் பல நடாத்தியும், இருக்கிறார்கள்.

## சுவாமிக்கு இளமைப்பருவத்திற் பள்ளிக்குச் செல்லும் சமயம், விநாயகர் பூசை செய்தயிடம்.

இருபெருஞ் செல்வத்தொரு பெருங்குரிசிலும், பெருந்தகையாளருமாகிய, கடைக்கண் விநாயகநல்லூர் எஸ்டேட், சீர்காழி, விளந்திடசமுத்திரம் உயர்திரு. மருதநாயகம் பிள்ளை அவர்கள், சுவாமிகள் அவதரித்த ஆச்சாள்புரமென வழங்கும் திருப்பெருமணநல்லூரில் வடக்கு வீதியில் உள்ள தமக்குச்சொந்தமான தோட்டத்தில், சாதுமா முனிவர் தியான நிலயமென ஓர் அழகிய கட்டிடத்தை அமைத்து அதில் சுவாமிகள் திருவுருவப்படத்தை நிறுவி, பூசை என்றும் நடைபெறும்படியான ஓர் சிறந்த பணியையும் செய்துள்ளார்கள்.

பழநியில், ஆதியில் தானிருந்து தவம்புரிந்த குகை, ஆதியாச்சிரமத்தைத் தேவகோட்டை திரு. பழ. க. கண்ணப்ப செட்டியாரவர்களைக்கொண்டு, அழகிய கெட்டிக் கட்டடமாகக் கட்டுவித்து, தனித்திருந்து தவம்புரிவாருக்குத் தகுதியாக வைத்திருக்கிறார்கள்.

## சமத்தூர் ஜமீந்தாரவர்கள்.

கொங்குநாட்டில் மாபெருஞ் செல்வராகிய, சமத்தூர் ஜமீந்தாரவர்களின் பெரும் பொருட்செலவில், நமது நந்தியடி ஆச்சிரமத்தின் கீழ்பால், அறுகோண மந்திரத் திருக்கோவில் ஒன்று மிக அழகுற அமைத்து அதன் நடுவில் அழகிய அறுவரைப் பீடம் ஒன்று அமைத்து, அதன்கீழ் நிலவறைக் குகை ஒன்றமைத்து, அவ்வறுவரைப் பீடத்தின் மேல், மிகவனப்புறச்செய்யப்பெற்ற தேவியின் மாமேருவடிவத்தை

பிரதிஷ்டை செய்து, அக்கோவிலுக்கு ஈசானிய பாகத்தில், இரண்டு திருக்கோவிலமைத்து அதில் விநாயகர், விஜய பைரவர் ஆகிய இரு தெய்வத் திருவுருவச் சிலைகளைப் பிர திஷ்டை செய்து வந்து வணங்கும் அன்பர்களுக்கு அருள் புரியும்படி அமைத்திருக்கும் காட்சியை தமிழ் நன்மக்கள் ஒருதடவையாவது, பழநியம்பதிக்குச் சென்று, கண்டுகளிக்க வேண்டியது அவசியம்,

## அறப்பெருஞ் செயல்களுக்கு வழித்துணையான,

## ஸ்ரீ தவத்திரு நாகப்பூர் சுவாமிகள் தவம்.

அடிகளார் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு அரும் பெரும் பணிகளையும், அவர்களுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளைத் திருவுளப்பாங்கின்படி குறிப்பறிந்துசெய்து முடிக்கும் ஆற்றலும், மதிநுட்பமும் வாய்ந்து, கட்டளைக்கு கீழ்ப்படிந்து, மாறுபாடின்றி, முணங்கோது அன்போடும். ஆர்வத்தோடும் தொண்டு செய்துவரும் துறவிகளாகிய மாணவர்களுள், முதன் மாணவராக இருப்பவர், தவத்திரு, நாகப்பூர் சுவாமிகளாவார்கள், இவர்கள் 1909-ம் ஆண்டில் பழநிமலை மீதும், திருவாவினன்குடியிலும் நடந்த, அஷ்ட பந்தன மகாகும்பாபிடேகத்தின் போது பழநிக்கு வந்து துறவியாய் மலைக்குத்தென்புரம் உள்ள நந்தன் தோப்பு, சமா தாலயத்தில் தங்கி தவஞ்செய்துகொண்டு, முத்துச்சாமி எனும் பெயரோடிருந்தார்கள். அப்போது பழநியில் பிளேக் என்று சொல்லுங் கொடிய நோய் பரவியது. அதுகண்டு, ஆட்சியாளர் அனைவரையும், வெளியேறும்படி கட்டளையிட் டார்கள். அப்போது நமது முத்து சுவாமிகளும் புறப் பட்டு யாத்திரையாக, பல தலங்களுக்குஞ் சென்று, இறுதி யாக நாகப்பூருக்குச் சென்று, அங்கே பல யாண்டுகள் தங்கி விட்டார்கள். பின்னர், புறப்பட்டு பழநிக்கு வந்தார்கள்.

அதிலிருந்து அவர்களுக்கு **நாகப்பூர் சுவாமிகள்** எனப் பெயர் வழங்கலாயிற்று. மீண்டும் அவர்கள் முன் னிருந்த ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்து, வேள்விக் குண் டம் அமைத்து, நித்தியம் ஓமாக்கினி வளர்த்துக்கொண்டு

அதன் முன்னிருந்து ஞானகிரியன் வந்து; தனக்கு அருள் செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்னும் மந்திரத் தொடரைச் செபம் செய்து கொண்டு, தவம் புரிந்து வந்தார்கள்.

## சாது சுவாமிகள் மீண்டும் யாத்திரை.

1914-ல் நமது சாதுமா முனிவர், கோவணதாரியாக அங்குவந்தார்கள். அவர்களைக்கண்டு வணங்கி இவர்களையே குருவாக அடையவேண்டுமென்று எண்ணினார்கள். அப்போது அதற்குறிய வாய்ப்பு இல்லாததால், அடிகள் திரும்பவும் வெளியே யாத்திரையாகச் சென்றுவிட்டார்கள். ஆயினும் அவர்களையே குருவாக அடைவேன் என்ற உறுதியோடிருந்து தவம் புரிந்து வந்தார்கள்.

## அறப்பெருஞ் செயல்களைத் திறம்பட நடாத்தும் ஸ்ரீ நாகப்பூர் சுவாமிகள்.

நமது சாதுமா முனிவர் யாத்திரைகளை முடித்துக் கொண்டு. குரு நந்தியடிகளார் கட்டளைப்படி; பழநியம்பதி வந்ததும், நாகப்பூர் சுவாமிகள் கண்டு, ஆர்வத்தோடு வணங்கி, முன்னமே நம்மை ஆட்கொண்ட ஆண்டவன் குருமூர்த்தியாக எழுந்தருளினார், என்று கருதி, உடல் பொருள் ஆவி மூன்றையும், குருநாதனுக்கே உரிமையாக்கி ஞானோபதேசம் பெற்று, ஆன்ம லாபத்தை யடைந்து, குருமூர்த்திகளின் கருத்தின்படி, இதுவரை நடந்தேறிய, நடைபெறும் பணிகள் யாவும், பல மெய்யன்பர்கள் மூலம், ஐந்து லட்சம் ரூபாய் வரையில் வந்து செலவிடப்பட்டு, செய்து முடித்தும் செய்து கொண்டும் வருகிறார்கள்.

## குமரகுருபர அடிகளார் நற்றவம்.

அவர்கட்கு அடுத்தபடியில் நம் சாதுமா முனிவர் பால் தலையன்புடைய மாணவர், தம்பிச்சாமி என வழங்கும் குமரகுருபர அடிகளாவர். இவர்கள் கொங்கு நாட்டில்,

வேட்டகாரன்புதூரில், தொண்டைமண்டலச் சைவ வேளாளர்மரபில் பெருநிலக்கிழார் குடியிற் பிறந்தவர். தமிழும், ஆங்கிலத்தில் பி. ஏ. வரையிற் படித்தவர். இளமையிலே (சேரநாட்டு இளங்கோ அடிகளைப்போல) துறவடைந்து சாதுமா முனிவராகிய காந்தமலையிற் கவரப்பெற்று, உடற் பொருளாவி யனைத்தையும் அவர்க்கே உரித்தாக்கி பசுமைநிற ஆடையுடுத்துப் பற்றற்று பணிபுரிந்துவரும் பண்பினராவர்.

## சிவகுமார அடிகள், சிவப்பணிகள்.

அதற்கு அடுத்தபடியில், பழநிமாண்டவற்குச் சாதுமாமுனிவர் ஏற்படுத்தியுள்ள, பூசைப்படித்தரக் கட்டளைகள் யாவையும் தூய்மையொடும், பரிவோடும், பணிவோடும், சிரத்தையோடும் நாடோறும் நடத்தி வருவதற்காகவே துறவுகொண்டு, சாதுமா முனிவர்க்கு அடிமையாகி, குருநாதன் கட்டளைப்படி "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று பணிசெய்து வரும் சின்னச்சாமி என்ற சிவகுமார அடிகளாவார்.

## குருமூர்த்தியை வணங்கும் திருமூர்த்தி அடிகள்

மற்றும் சாது மாமுனிவர் மாணவர்களின் அடிகளார் செய்துவந்த பூசைக்கிரமங்களை, வரன்முறையாக செய்து வருபவரும், தமிழ் சமஸ்கிருத மொழிகளை நன்கு பயின்றவருமாகிய தவத்திரு. திருமூர்த்தி அடிகள், அடியார்களுக்கு தளபதி போலிருந்து பணியாற்றிவரும் ஜெகந்நாத சுவாமிகள் போன்ற நூற்றுக்கணக்கான அடியார்களிருக்கின்றார்கள். அவர்கள் தம் வரலாற்றனைத்தும் விரிக்கிற் பெருகுமாதலால் விடுத்தனம்.

இது நிற்கச் சென்னிமலையிற் றோன்றி, பழநியில் வசித்து வருபவரும், ஆதிசைவ அந்தணர் குடியிற்றோன்றி இளமையில் நல்லாசிரியர் பால், தமிழும், சமஸ்கிருதமும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, அதன்மூலம் சைவாகமங்களை

யும், மெய்கண்ட சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்றுத் தெளிந்து "கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற மறை மொழிப்படி, கிரியா விசேட அநுட்டான பரராய் விளங்கும் திருத்தகு பழநி ஈசானிய சிவாச்சாரியரவர்கள், நமது சாது மாமுனிவருக்கு அருச்சனைக்குரிய வலக்கை போன்றிருந்து பல சிவ வேள்விகளையும், தெய்வப் பிரதிஷ்டைகளையும், ஆயுள் ஓமங்களையும், பூசனைகளையும் செய்வித்து அடிகளா ரிடத்தில் தலையன்பு பூண்டொழுகிய தகைசால் பெரியாரவர்.

மற்றும் அடிகளாரின் மெய்த்தவ மேன்மையைக் கொங்குநாடெங்கணும் பரப்பி, அந்நாட்டிலுள்ள மெய்யன்பர் களும், பெருஞ் செல்வர்களும், பெருநிலக் கிழார்களும், ஜமீன்தார்களும் சாது மாமுனிவரின் திருவருளுக்குப் பாத் திரமாகி, உபதேசம் பெற்று, சிவநேயச் செல்வர்களாய்ச் சிவ பூசா துரந்தராகமிளிர்வதற்கு காரணமாயிருந்தவரும், அடிக ளாருக்கு அணுக்கத்தொண்டரும் ஆன்மநேய உரிமைப்பா டுடையவரும், ஆயவர் கோவை திரு. மருதாசலக் கவுண்டர் ஆவர்.

## மடாதிபதி, ஸ்ரீலஸ்ரீ பாலைய சுவாமிகள்,

பழநித் திருவாவினன்குடியில், மிகப் பழமையாகிய ஐந்து ஆதீனங்களில், முதன்மை ஆதீனமாகிய சித்த பாலைய ராதீனத்திற்கு அதிபதியாயிருந்து, சித்த பாலைய ராதீன மடத்தை மிக விரிவான மாளிகையாக, அழகுறக் கட்டி முடித்து, பழநியாண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்த வரும் அன்பர்களுக்கெல்லாம், (குறிப்பாக சேரநாட்டு மக் களுக்கெல்லாம்) சொந்த வீடுபோல் தங்கியிருப்பதற்கு இடங்கொடுத்தும், காலையிலிருந்து மாலைவரையிலும், சிறு குழந்தைகளுக்கு தின்பண்டத்திற்காகக் காசு கொடுத்தும், எவ்வளவு பேர்கள் அடியார்கள், அன்பர்கள் எந்நேரத்தில் வந்தாலும், அத்தனைபேர்க்கும் சிற்றுண்டியும், தீம்பாற் சுவைநீரும் அளித்தும், உணவுகொள்ளும் நேரத்தில் வரும் அடியார்கட்கு அறுசுவை உணவளித்தும், தகுதியுடைய அடியார்கட்கு வழிச்செலவுக்குப் பணம் கொடுத்தும், தமிழ்

நாட்டுத் துறவிகள் சங்கத்தின் புரவலராகவும், துணைத் தலைவராகவுமிருக்கும், தவத்திரு. பாலைய சுவாமிகள், சாது மாமுனிவர் பழநியம்பதிக்கு வந்த நாள் முதல் ' அவர்களிடத்தில் மிகுந்த உள்ளன்பும், உரிமைப்பாடும் உடையவர்களாய் அடிகளாரின் உடல்நலத்திற் கண்ணுங்கருத்தும் உடையராக யிருந்து குறிப்பறிந்து வேண்டுவன செய்து, நாடோறும் மலை சுற்றிவரும்போது, நந்தியடிகள் ஆச்சிரமத்திற்கு வந்து, அடிகளாரை வணங்கி அளவளாவி இருந்து, விடைபெற்றுச் செல்வார்கள் என்றால், நம் சாது மாமுனிவரின் தவ வலிமை எத்தகையதென்பதை நன்கறியலாம்.

நிற்க, இறைவன் தமது அடியார்களுக்கும், மெய்யன்பர்கட்கும் அநுக்ரகம் செய்யும் பொருட்டு, திருவிளையாடல் புரியும் போதெல்லாம், உடன்சென்று வேண்டிய செலவுகட்கெல்லாம், நிதியை வாரிவாரிக் கொடுக்கும் நிதிக்கதிபதியாகிய குபேரன் போல நமது சாதுமா முனிவர் செய்யும் சிவப்பணிக்கெல்லாம் குறிப்பறிந்து வாரிக்கொடுக்கும் பூலோகக்குபேரர்கள் என்புகழப்படும் பெருஞ்செல்வர்கள் காரையார்மங்கலம், திரு. வீரணன் அம்பலகாரர், ஈரோடு, திரு. முருகேச முதலியாரவர்கள், ஆச்சாள்புரம் திரு. வேங்கடேசம்பிள்ளையவர்கள், கடைக்காநல்லூர் மயினர், சீர்காழி திரு. மருதநாயகம் பிள்ளையவர்கள், கூடப்பள்ளி மயினர், திரு. சிவகுருநாத பிள்ளையவர்கள், பெருவளநல்லூர் பண்ணையார் திரு. கிருஷ்ண ரெட்டியார், ஷையார் புதல்வர்கள் திரு. இராஜா சிதம்பர ரெட்டியார், முத்தக்காபட்டி பண்ணை திரு. தியாகராய ரெட்டியார், சிதம்பரம், தேவாரப் பாடசாலைத் தலைவர் திரு. பழனியப்ப முதலியார், கொங்கு நாட்டுத் திரு. சமத்தூர் ஜமீந்தார், பொள்ளாச்சி திரு. பொன்னுச்சாமிக் கவுண்டர் முதலிய பல மெய்யன்பர்கள் இருக்கிறார்கள், அவர்களின் பெயர்களும், ஊர்களும், நினைப்பிற்கு வாராததால் இங்கு எழுதுவதற்கில்லை.

## அடிகளாரின் நற்பண்பு.

இது நிற்க, கல்வியிலும் ஒழுக்கத்திலும், புலமையிலும், தலைமையிலும், பேசும் நாவண்மையிலும், தமக்கு

ஒப்பாகவோ உயர்வாகவோ இருக்கும் துறவிகளைத் தம் மிடத்தில் சேர்த்துத் தமக்குச் சமமாக வைத்திருந்தால் தமக்கிருக்கும் மதிப்பும், சிறப்பும் போய்விடுமென்றெண்ணி அத்தகையோர்களைக் கிட்டவே சேர்க்காமலும், கண்ணுற் பார்க்காமலும் இருப்பதுவே உயரிய பண்பெனக் கடைப் பிடித்தொழுகின்ற, பெரிய ஆதீனத்தலைவர்கள், மடாதிபதி களைப் போலல்லாமல், நமது சாதுமா முனிவர், அத்தகைய பெரியவர்கள் எங்கிருந்தாலும் தாமே ஆங்கு சென்று அவர்களோடு அளவளாவி அவர்களைத் தமது அன்புமொழி களாற் பிணைத்து தமதிருப்பிடத்திற்கு கொண்டு, அவர் களுக்கு ஒரு தனி மதிப்பும், சிறப்புங் கொடுத்து, உபசரித் துத் தாம் எங்கு சென்றாலும், அவர்களையும் உடனழைத் துச் சென்று, கூடியிருந்து மகிழும் உயர்குணக் குன்றாவர். இதற்குச் சான்று, மூன்று வயதிலே முற்றுந்துறந்து முனி வராய் 'துறவிக்கு வேந்தனும் துரும்பு' எனும் பொன் மொழிக் கிலக்காக விளங்கும், தகைசால் தவத்திரு, சுவாமி சைதன்யசிவம் அவர்கள். அவர்களின் மாணவராகிய, தமிழ்ப்பெரும் புலவர், சங்கேந்தி தவத்திரு. குக சதாசிவ அடிகளார், சாது சங்கரானந்தா (பி. எ.) அவர்கள், சிற்றம் பலத்தடிகள் மரபு தவத்திரு. ஞானானந்த அடிகளார், பாட சாலையிலும் மௌனசுவாமிகளிடத்தும் மாணவராக இருந்தது முதல் இறுதிவரை, அணுக்கத் தொண்டரும், அன்பநேயரு மாயிருந்து வரும்; சிதம்பரம் தவத்திரு. சாது சிங்காரவேல் அடிகள், பழனிபசுமடம், ஆதீனம் தவத்திரு. சிங்காரவேல் அடிகள், திருவருணைத் தவத்திரு, பெருமாள் சுவாமிகள், ஈசான்யமடம் தவத்திரு.சி சுப்பையஞானதேசிக சுவாமிகள், தவத்திரு பொன்னம்பலசிவம், முதலான பல துறவிகளை தான் எங்கிருந்தாலும் பலகால் உடன் வைத்திருந்து, தனி மதிப்புஞ் சிறப்புஞ் செய்துவந்தார்களென்பது யாவரும் அறிவார்கள். என்றால், அடிகளாரின் பெருந்தன்மை எத் தகையதென்பதை இனி நாம் விளக்கவேண்டுவதில்லை.

ஆகவே இன்னும் அடிகளாரின் பெருமையையும், அவரவர்களால் செய்த அரும்பெருஞ் செயல்களை விரிக்கிற் பெருகுமாகையால் இத்துடன் சுருக்கி முடித்துவிடுகிறோம்.

அடிகளார் தமக்குப்பின் தான் ஏற்படுத்திய அறங்களையும், ஆச்சிரமங்களையும் செவ்வனே நடத்திவருவதற்காகத் தமது மாணவர்கள் மூவரை ஏற்படுத்தியிருக்கிறார். அதாவது. பழநி நந்தியடிகள் ஆச்சிரமம், சோர்க்காச்சிரமம், இல்லத்தார் தங்கு நிலையம் முதலியவற்றிற்கு தவத்திரு, நாகப்பூர் சுவாமிகளை அதிபராக நியமித்தும்,

பழநி 'சண்முக விலாச' அன்னதான நிலையத்திற்குத் தவத்திரு தம்பிச்சாமி யென வழங்கும் குமரகுருபரசுவாமிகளை அதிபதியாக நியமித்தும்,

அடிகளார் ஏற்படுத்திய பழநித் தேவஸ்தான பூசை படித்தர கட்டளைகளை கட்டளை மடத்திலிருந்து செவ்வனே நடத்தி வருவதற்கு தவத்திரு. சின்னச்சாமி யெனவழங்கும் சிவகுமார சுவாமிகளை அதிபராக நியமித்துமிருக்கிறார்கள்.

இதுவன்றி திருவருணைத் திருக்கூட்டத்திற்கு. அடிகளார் நிரந்தரத் தலைவராக இருந்து, தமது பிரதிநிதியாக அடியார்களை நியமித்து, திருவருணைத் திருக்கூட்டத்தை நடத்திவந்தார்கள். அஃதன்றி ஷை திருக்கூட்டத்திற்காக பொதுமக்களிடம். திருக்கூட்டத்தார் வசூல்செய்து அடிகளாரிடம் சேமித்து வைத்திருந்த ரூபாய் 2200—0—0 இரண்டாயிரத்திருநூறுக்கும், திருவண்ணாமலை டவுன் 1-வது வார்டு பிளாக் 20 மேலக்கோபுரத் தெருவில் (அதாவது மேலமாட வீதி) 1329 சதுரடி (அதாவது 5 செண்டு) உள்ள மனையும், அதிலிருக்கும் சிறிய தட்டோடுக் கட்டிடம் உள்பட தமது மாணவர் நாகப்பூர் சுவாமி பேருக்கு, கிரையம் வாங்கி வைத்துள்ளார்கள்.

அடிகளார் 1949 விரோதியாண்டு மார்கழித்திங்கள் ஆருத்ரா தரிசனத்திற்காக சிதம்பரத்தில், ஈரோடு முருகேச முதலியார் பங்களாவில் தங்கியிருக்கும்போது, சென்னை திரு ச. சச்சிதானந்தம்பிள்ளை (பி. ஏ., எல். டி.,) அவர்கள், சிதம்பரம் நந்தனார் மடம், சகஜானந்த அடிகள் (எம். எல். ஏ.) அவர்கள், தில்லையடி விவேகானந்தர் ஆச்சிரமம். சாது சங்கரானந்தர் (பி. ஏ.) அவர்கள், திருவண்ணாமலை பெருமாள்

சுவாமிகள், சென்னை சுவாமி அருணகிரிநாதர், சாது சிங்கார வேல் அடிகள், திருக்குற்றாலம், சுகானந்த அடிகள் முத லானவர்கள், அடிகளாரிடம் வந்து, வணங்கித் தமிழ்நாட்டு துறவிகள் சங்கத்திற்கு நிரந்தரத்தலைவராக இருக்கவேண்டு மென்று, மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதற் கிணங்க, திருநீறு அளித்தார்கள். பின்னர், 1950 விரோதியாண்டு மாசித் திங்களில், பெருவளநல்லூரில் நந்தயடிகள் ஆச்சிர மத்தில் நடைபெற்ற, குருபூசை விழாவின் போது, நடத்தப் பெற்ற, தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கப் பொதுக்கூட்டத் தில், நமது சாதுமா முனிவரைத் தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்திற்கு நிரந்தரத் தலைவராக அடியார்களால் தேர்ந் தெடுக்கப்பட்டது, அதிலிருந்து எட்டு மாதங்கள், தலைவ ராக இருந்தார்கள். தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தோடு திருவருணைத் திருக்கூட்டத்தையும் இணைத்து திருக்கூட் டத்தைச் சீர்திருத்தி அமைத்து. சீரியமுறையல் நடாத் தும்படி முக்கியமான சில அடியார்களிடம் கட்டளையிட் டார்கள். இறுதியாக, தமிழ்நாட்டுத் துறவிகள் சங்க வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள். ஆனித் திருமஞ்சனத்தின் போது சிதம்பரத்தில், அகத்தியாச்சிர மத்தில் நடைபெற்ற, தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கப் பொதுக்கூட்டத்திற்கு தானே தலைமை வகித்து நடத்தி னார்கள். ஆனால் உடல்நலங்குன்றியதால், திரு. வெங்கடே சம் பிள்ளையவர்களால், அடிகளாரின் தவத்திற்காகவே கொள்ளிடைக்கரையருகில், தமது பண்ணையில் அமைக்கப் பெற்றிருக்கும்சரஸ்வதிவளாகமேன்னும் தவநிலையத்திற்குச் சென்று தங்கினார்கள். ஐப்பசி மாதம், பழநியம்பதிக்கு வந்து சேர்ந்தார்கள். இவ்வுடலோடிருந்து ஆற்றிய அருந் தவமும், வேள்வியும், அறப்பணியும், திருப்பணியும், சிவப் பணியும் போதும், இனிமேல் எம்மிடத்தமர்ந்து சாந்தி யடைந்து சிவானந்தத்திற்றிளைப்பாராக வென்று, பழநி யாண்டவன் இட்ட கட்டளை போலும். கி. பி. 1950 நவம்பர் விக்ருதியாண்டு, ஐப்பசி திங்கள் 21ம் நாள் தேய்பிறை ஏகாதசி, உத்திர நன்னாள் சேர்ந்த திங்கட்கிழமை காலை 9 நாழிகை அளவில், படுக்கையிலிருந்து வடமுகமாய் பழநி மலையை நோக்கி, இருகைகளையும் கூப்பி. பழநியாண்டவனை வணங்கிய வண்ணம் நமது சாதுமாமுனிவர் பரிபூரண சிவா

நுபவ எழிலிலோடுக்க முத்தியை அடைந்தார்கள், அம் முனிவர் தம் மெய்ப்புகழ்ப்பாடிப் பரவி வாழ்த்தி, எத்தி வணங்கி உய்ய உலகெலாம்.

பழநி சாதுமா முனிவர் வரலாறு முற்றிற்று.

---

## சமாதிக் குறிப்பு.

அவர்களது தெய்வத் திருவுருவை, அவர்கள் மாண வர்களும், அடியார்களும், மெய்யன்பர்களும், பலவூர்களில் இருந்து வந்தி குழுமிக் கண்டு வணங்கி, வாய்விட்டாற்றி, கண்ணீர் மல்கி அடக்கத்திற்கு ஆவன செய்து நிற்க, பழநி தேவஸ்தானத்தாரும், திருவாவினன்குடி சித்த பாலையர் ஆதீனம், தவத்திரு. பாலைய ஞானதேசிக சுவாமிகளும், அபிடேக ஆராதனைக்கு ஆவன அனைத்தும் கொண்டு கோவில் மேளதாள வாத்திய மரியாதையொடு, வந்து அடிகளார் திருவுருவிற்கு, அபிடேக அலங்கார தீப ஆராதனை முதலியவைகள் அனைத்தும் சிறப்புற நடாத்தி, முன்னமே சமத்தூர் ஜமீந்தார் அவர்களால் அமைக்கப்பேற் றுள்ள அறுகோண மந்திரத் திரிக்கோவில் நடுவிலுள்ள, அறு வரைப் பீடத்தின் கீழ் கட்டிவைத்திருந்த, நிலவறைக்குகை யில் சமாதி செய்யப்பெற்று, அதன்மேல் விளங்கும், அறு வரைப்பீடத்தின் முன் அடிகளார் பூஜித்து வந்த தேவியின் மேருவடிவத்தைப் பிரதிஷ்டை செய்து, பத்தரம் செய்யும், முத்தி வழிபாடும், மண்டலாபிடேகமும் மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கப்பெற்றது.

---

## வெண்பா.

ஆறுபதி னொன்று மிரத்துத்தோளாயிரத்தோ
டேறும் ஐம்ப தாங்கிலத்துக் கேல்விகிர்தி—கூறுதுலாத்
திங்களிரு பத்தோன்றுந் தேதியிற்சா துச்சாமி
மங்கைபங்கன் தாள்சேர்வாழ் வாம்.

## கட்டளைக் கலித்துறை.

மாகன மார்பழ நித்தண்ட பாணியாம் வள்ளலுக்கு
யோகம தார் சாது மாமுனி நற்றேரண் வேந்தியற்றிப்
போகமுனி நற் புலிப்பாணி பாலையர் போன்றுயர்ச்சி
ஆகும் பழனி வரைப்பால் தவஞ்செய் தமர்ந்தனரே.

தவத்திருவடிகள்.

**பொன்னம்பலசிவம்,**

பழநி.

உ

ஓம் நந்திகுரவே நம:

# சாதுகுரு நவமணிமாலை.

ஆசிரியர்:

கோவை கவியரசு வித்துவான்

கு. நடேச கவுண்டர்.

பழநி அருட்டிரு சாதுசுவாமிகள்

மண்டலாபிடேகத் திருநாள் வெளியீடு.

## காப்பு.

### வெண்பா.

சாது குருவின் தடந்தோட் கிடந்தொளிர
ஓது நவமணிமா லைக்குதவும்—போதன்
திருமாலும் தேடரிய செம்மையதாய் வேதக்
கருவூலம் சேர்மாதங் கம்.

### வெண்பா.

திருவும் படிப்புமிகு சீரும் எனக்கு
மருவும் படியளித்த வள்ளல்—குருவாகி
வந்தடிமை கொண்டருளு மாதவனே சாதுவே
தந்தையொடு தாய்தெய்வ தம். (1)

## கட்டளைக் கலித்துறை.

தம்பெரு மாண்பினைத் தாமறி யார்பெரியோ
ரெனுஞ்சொல்
வம்பல வெண்பதை யானறிந்தேன்
மறை நான்குமயன்
உம்பருந் தேறருஞ் செம்பொருள்
சாது வுருவுடைத்தாய்
எம்பொருட் டால்எளி வந்ததன்றோ
இவ் விருநிலத்தே (2)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நிலவு குலவும் சடைமறைத்தாய்
நெற்றி யொற்றைக் கண்மறைத்தாய்
உலகு நடுங்க வரும்விடத்தை
உண்ட கண்டக் கறைமறைத்தாய்
குலவி யெமதுட் குடியிருக்கும்
குருவே சாதுக் கோமானுன்
அலகில் கருணை விழிக்கடையில்
அனைத்தும் வெளியா யினவாலோ (3)

## எழுசீராசிரிய விருத்தம்.

ஆலநன் னிழலோ கயிலையி னுச்சி
யணிமணி மண்டப மேயோ
மாலயன் அமரர் திருநடங் காணு
மன்றமோ நின்றிருக் கோயில்
சீலமுந் தவமுங் கருணையு முருவாய்த்
திகழ்குரு சாதுவே வேத
நாலவை முடிவோ உழுவலன் பினருள்
நளினமே நவின் றரு ளெமக்கே (4)

## ஆசிரியப்பா.

நவிலுந் தகைத்தோ நவிலுந் தகைத்தோ
புவியவ ரன்றிப் பொன்னுல கோரும்
சவிமணிப் பணாடவிச் சருப்ப ராசனும்
நவிலுந் தகைத்தோ நவிலுந் தகைத்தோ
ஊழியும் வாழிருங் காழியி லேழிசை
யின்றமிழ் விரக னென்றவ தரித்தோன்
திருமணம் புணர்ந்து பெருமண நல்லூர்ச்
சோதியிற் கலந்து மேதினி யுய்ய
ஆண்டிருந் தேபின் மீண்டது போலச்
சாது வென்ன வோதும் பெயரொடு
வந்தனை பெரும், சந்த நான்மறையும்
செந்தமி ழுந்தேர் நந்தியடிகளின்
சிந்தைக் குகந்த திருத்தவச் சேயாய்
பழமறைகள் முழுதுணர்ந்தனை
வேத நெறி விளங்குவித்தனை
சைவத்துறை தழைவித்தனை
திருவா ரூரில் வருநா வரசென
நீற்றுக் கோலந் தோற்றிப் பொலிந்தனை
மறத்துறை துரந்தனை யறத்துறை வளர்த்தனை
கைத்தொண்டு செய்தனை கருணை மிகுத்தனை
நாவலூர்வரு நம்பிபோலச்
சிவயோக நெறிநின்றனை
திருவாத வூரன்போல்
ஒருவாத பேரன்பினை
அகத்தியன் வசிட்டன் துருவாச னாதி
முனிவர்போன் முதல்வி சமயமும் பயின்றனை
மந்திரந் தந்திரம் மயக்கற வல்லுனை
அடியவருக் கருட்குரு நீ

மிடியர்பசிப் பகைஞனுநீ
செல்வர் நன் னெறியிற் செலவிட வருளினே
கல்வி யாளர்க்குக் கடவுளேக்காட்டினே
எல்லோ ரையுமே நல்லா றய்த்தனே
என்றென் றெடுத்தே எனத்து நாளோதினும்
உலப்புறு மின்புகழ் அனைத்தும்
புலத்துறை கொண்டவன் புகலுமாறே. (5)

## நெடுந்தாண்டகம்.

மாற்றுயர்ந்த பசும்பொன்னல் வகுத்தாற் போல
வயங்குதிரு மேனியிற்கல் லாடை யுண்டே
கீற்றுமதி போலநுதல் வெண்ணீ றுண்டே
கிளர்நுதற்கண் ணெனவொளிர்சிந் தூரமுண்டே
ஊற்றிருந்து கருணைபொழி விழிக ளுண்டே
உளங்கவரு முத்தனபுன் முறுவ லுண்டே
ஏற்றவருக் கில்லையெனு ஈகையுண்டே
எங்கள் குரு சாதுவெனும் எதிரா சர்க்கே (6)

## தரவுகொச்சகக் கலிப்பா.

சாதுவெனும் பெயர்தனக்கே தகுந்ததவ முனிவனெவன்
மாதுயரப் பிறவிநோய் மாற்றுமருத் துவனுமெவன்
ஆதுலருக் கன்னையென அமுதமளிப் பவனுமெவன்
போதுநிக ரவனடியென் புன்றலைக்கு மணியாமே (7)

## வெளிவிருத்தம்.

அணிகொண்ட திருமன்றி லருளாடல் புரிவானும்
—அவனே போலும்
பணிகொண்ட பாயல்மிசைப் பாற்கடலிற் றுயில்வானும்
—அவனே போலும்
மணிகொண்ட செந்நாவில் மறைபயிலு மிறையோனும்
—அவனே போலும்
பிணிகொண்ட பிறப்பறுக்கும் குருசாதுப் பெரியோனும்
—அவனேபோலும் (8)

## சந்த விருத்தம்.

உம்பர்க்கரி தாகிய செம்பொருளுன்
உள்ளத்துள தொண்பொருள் கல்விதரும்
செம்பொற்கொடி யாருன கண்மலரிற்
றிகழ்கின்றனர் கற்பக மங்கையதே
எம்பற்றென வந்தருள் சற்குருவே
இசைசாது வெனும்பெய ருக்குரியாய்
அம்பொற்கம லக்கழ லிற்பொலியும்
அடியார்விழை மோக்க மெனுந்திருவே (9)

சாதுசற்குரு தாண்மலர் வாழ்க

திருஞான சம்பந்தன் சேவடி வாழ்க.

உ

சிவமயம்.

# பழநி ஸ்ரீலஸ்ரீ சாது சுவாமிகளைக் குறித்த இரங்கற்பாக்கள்.

ஐயோ தமிழுலகில் ஆதரவாய்ச் சாதுவர்க்கம்
பெய்யு முகிலெனவே பேசி நிற்க—மெய்யாக
நின்றுதவி னான்சாது நின்மலனு மேங்குவகை
இன்று மறைந்தான் பழனியில்

அரனடியி லன்போ அடியவர்பா லன்போ
பரகுருவின் பாலன்போ பார்க்கில்—உரம்பெறுவ
தென்றறிய வொண்ணாமை லிங்குறைந்த சாதுவே
என்றறிய மீள்வை யினி

எல்லாரு மென்பா லினியனெனப் பேசுவகை
எல்லார்க்கு நல்லவனா யிங்கிருந்தாய்—மல்லலுறுஞ்
சாதுவே பேதமொரீ இச் சாதுவர்க்க மோம்புமொரு
காதலே போதியோ காண்.

பேத மபேதம் பேதம பேதமென
ஓதி நிற்கும் யாவர்க்கு மொன்றாக—நீதிவழி
தப்பாது நின்றொழுகுஞ் சாதுவே நீயுமென்னே
இப்போது சென்றாய் எவண்.

அம்பிகைபால் வெள்வே ளமிர்தன்பால் என்றைக்கும்
பம்புமன்பு கொண்டொழுகும் பார்த்திபா—நம்பியுனை
வாழுந் தவக்குலங்கள் மாழ்கிநிற்க இன்பமே
சூழு நிலைக் கேகனன்றோ சொல்.

இங்ஙனம்,

ஸ்ரீ த. நாராயணசாமி,

அறுபத்துமூவர் மடம், திருவையாறு.

சிவமயம்.

# பழநீ ஸ்ரீலஸ்ரீ சாது சுவாமிகளைக் குறித்த இரங்கற்பாக்கள்:

1. திருஞான சம்பந்தன் றிருமணத்திற் சோதியுடன்
திகழப் பூத்து
வருஞானப் பெருமண நல் லூரென்னும் வளம்
பதியில் வாழ்வின் மிக்க
வருஞானப் பெருங் குடியில் உயர்தவத்தோர்
செய்தவத்தால் உய்யத்தோன்றிப்
பெருஞானம் பெற்றுயர்ந்த சாதுமுனி வரன்
பெருமை பேசப் போமோ

2. தரையவர்தந் தவப்பயனு யுதித்த பெருந் தண்
ணளியோய் தம்மைச் சார்ந்த
கரையவர்தம் மனவிருளைக் கணத்தோட்டுங்
கற்பகமே கதியாங் கண்ணே
உரையவரி, னுளங் களிக்க உணவூட்டு மூத்த
மனும் உதாரச் செம்மால்
பரையவள்தன் னருகிருக்கப் பரிவுடனே
அழைத்தனளோ பகருவாயே

3. சோறளிக்கு முளமெங்கே கொடையளிக்குங்
கரமெங்கே தூயோய் நின்றன்
ஏறளிக்கு மருளெங்கே எமையணைத்துப்
பவமகற்று மியல்தா னெங்கே
ஊறளிக்கும் பசிநீக்கு முயராண்மைக் குண
மெங்கே உளந்தான் வாடத்

துறளிக்கும் வகைநீக்கித் தொல்லுகை
மகிழவொரு சொல்லைத் தாராய்

4. சீர்பெற்ற வுயர்சீ தகக் காதியைத்தான்
சிறப்பாகச் செப்பலாமோ
தார்பெற்ற வுயர்சான சுருதியெனுந் தகை
யோனைச் சாற்ற லாமோ
ஏர்பெற்ற கொடைத்திறமும் பாத்துணும்
எவ்வெவரும் ஏற்றிப் போற்ற
நாற்பெற்ற வுயர்சாது முனிவரனே நின்னுடைய
நயத்தாற் கண்டோம்

5. திருமுருகன் திருப்புகழைத் தினம் போற்றித்
திகழுமுளம் பெற்ற வுன்றன்
பெருவாழ்வும் பாலெலர்டுதேன் பரிந்தூட்டும்
பெட்புளமும் பெரிது, மெண்ணி
வருமடிய ருளமகிழ வரவேற்றுவுணவளிக்கும்
வண்மை பெற்றோய்
உருவொளியி னிதிருத்திக் கொண்டனனோ
சிவகுமா னுனைத்தா னென்னே

இங்ஙனம்,

கு. க. சதாசிவ அடிகள்,
தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தலைவர்
சங்கேந்தி. திருத்துறைப்பூண்டித்தாலுக்கா.

4803

ஆனந்த மின்சார அச்சுக்கூடம், பழநி.

KOVILUR